விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 32 ஞாயிற்றுக்கிழமை (16.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 209

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# தமிழ்ச் செல்வன் - ஹென்றிக்சன் கிளிநொச்சியில் அவசர சந்திப்பு

## தாக்குதல்கள் குறித்து விசனம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனை இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் நேற்று அவசரமாக சந்தித்துக் கலந்துரையாடி னார். நேற்று மாலை 5 மணிக்கு விடுதலைப்புலிக ளின் சமாதான செயலகத்தில் இச் சந்திப்பு நடை பெற்றது.** (10 ஆம் பக்கம் பார்க்க)


## கிளி. திரும்பினார் தயா மாஸ்டர்

(கிளிநொச்சி)

கொழும்பு அப்பலோ மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வந்த தமிழீழ விடுத லைப்புலிகளின் ஊடகப்பேச்சாளர் தயா மாஸ் டரின் சிகிச்சை முடிபடைந்து குணமடைந்த நிலையில் நேற்று கிளிநொச்சி திரும்பினார்.

தயா மாஸ்டர் மருத்துவமனையில் இருந்து தமது வழித்துணையுடன் நேற்றுக் மாலை கிளிநொச்சி வந்தடைந்த்தாக கண்காணிப் புக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் 2.40 மணியளவில் அவர் பயணம் செய்த வாகனம் ஓமந்தை யைத் தாண்டி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக் குள் வந்ததாகவும் (10 ஆம் பக்கம் பார்க்க)



வாகனேரியில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களை ஏற்றிக் கொண்டு செல்லும் வாகனத் தொடரணி.

## ஜே.வி.பியின் முக்கியஸ்தருடன் ஜனாதிபதி இரகசிய ஆலோசனை

(கொழும்பு)

ஜே.வி.பியின் முக்கிய உறுப்பினராக நந்தன குணதிலக அண்மையில் அலரி மாளிகையில் மகிந்தவைச் சந்தித்து ரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மகிந்தவுக்கும் நந்தன குணதிலகவிற்கும் இடையிலான சந்திப்பிற்கு அமைச்சரான நிர்மல கொத்தலாவலவே ஏற்பாடுகளை செய்திருந்ததாக கூறப்படுகின்றது.

அமைச்சர் நிர்மல கொத்தலாவலவுடன் அலரிமாளிகைக்குச் சென்று மகிந்தவை நந்தன குணதிலக சந்தித்துள்ளார்.

ஜே.வி.பியின் அரசியல் சபைக்கோ அல் லது நிறைவேற்று சபைக்கோ தெரிவிக்காது மகிந்தவைச் சந்திக்கச் சென்ற நந்தன குண திலக மூன்று மணிநேரம் மகிந்தவுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளார்.

பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால் ஜே.வி. பிக்கு பெரும் நட்டம் ஏற்படுமென்றும் அத னை ஜே.வி.பி.தலைவர்களும் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள் எனவும் மகிந்தவுக்குத் தெரிவித்திருக்கும் நந்தன குணதிலக தேர் தல் நடத்த தாங்கள் அஞ்சுவதாக தெரிவிக் காது விடுவதற்கும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## நவம்பர் 6 இற்கு முன் தேர்தல் நடத்த மகிந்தவுக்கு சோதிடர்கள் யோசனை

(கொழும்பு)

நவம்பர் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் பொதுத்தேர்தல் ஒன்றை நடாத்துமாறு ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தலை நடத்தும்படி மகிந்தவுக்கு சோதிடர்கள் இந்த ஆலோசனையை வழங்கியுள் ளனர். நவம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு பின்னரான காலப்பகுதி மகிந்தவுக்கு சாதகமாக இல்லாததால் அதற்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்தவேண்டுமென்றும் சோதி டர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அதனால் செப்ரெம்பர் மாதம் முடிவடையும்போது பொதுத்தேர்தல் ஒன்றை நடத்து வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்க வட்டாரத்தகவல்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

## மெத்தையுடன் கட்டப்பட்ட நிலையில் கொக்குவிலில் இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் அம்மன் வீதியில் மெத்தை யுடன் கட்டப்பட்ட நிலையில் இளைஞனின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

கண்கள் கட்டப்பட்டு கழுத்து வெட்டப்பட்டு மெத்தையினுள் சுற்றிக்கட்டப்பட்ட நிலையில் கொக்குவில் கோயில் வீதி நந்தாவிலில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு முன்பாக இச் சடலம் மீட்கப்பட்டது.

சடலத்திற்கு அருகில் கைவிடப்பட்ட நிலை யில் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டது. பொம் மைவெளி காக்கை தீவைச்சேர்ந்தவரும் தற் போது கொக்குவில் பொற்பதி வீதியில் வசிப் பவருமான சூரியகுமார் சுஜிர்தன் (வயது 28) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்ட வராவார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

இவரது சடலத்துடன் மக்கள் படையினால் உரிமை கோரப்பட்ட சுலோக அட்டை ஒன்று கட்டப்பட்டிருந்தது. களவு, கசிப்பு மற்றும் பல சீர்கேடுகளில் ஈடுபட்டதனால் இவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது என அச் சுலோக அட்டையில் எழுதப்பட்டிருந்தது.

இச் சம்பவ இடத்தை பார்வையிட்ட பதில் நீதிபதி கனக கேசவன் சடலத்தை பிரேதபரி சோதனைக்காக யாழ். போதனா வைத்தி யசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட் டார். (து-12,133)

## புனர்வாழ்வுக்கழக அலுவலகம் மீது நேற்று கிரனைட் தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோவில் வீதியில் இயங்கிவரும் தமி ழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகத்தின்மீது நேற்றுப் பகல் 12.30 மணியளவில் கைக்குண் டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று பகல் இவ் அலுவலகம் இயங்கிக் கொண்டிருந்த நேரத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத இருவரால் இக் கைக் குண்டு வீசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இக் குண்டு அலுவலகத்தின் முன்புறத்திலுள்ள தென்னை மரம் ஒன்றுக்கு அருகில் வீழ்ந்து வெடித்ததால் கட்டத்துக்கு சிறிது சேதம் ஏற்பட்டது எனினும் அலுவகத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## 12 இராணுவத்தினரது சடலங்களை செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்றது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகனேரியில் விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதல் நடவடிக்கையில் கொல்லப்பட்ட 12 இராணுவத்தினரது உடல்கள் நேற்று செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

செங்கலடி கறுத்தப்பாலத்தில் காலை 8.30 மணியளவில் இந்த சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன. ஒப்படைக்கப்பட்ட சடலங்களை முத லில் வாழைச்சேனை மருத்துவமனைக்கு செஞ்சிலுவைச் சங்கக் குழு வினர் கொண்டு சென்றனர்.

அங்கு இராணுவ அதிகாரி சட லங்களை அடையாளம் காட்டினார். அதன் பின்னர் இராணுவத்தினரால் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் அந்த சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக பொலநறுவ பொது மருத்துவமனைக்குக் கொண்டு (10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வந்தாறுமூலை உப்போடை வீதியில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு இத்துப்பாக்கிச் சூட் டுச் சம்பவம் நடத்தப்பட்டுள்ளது. அந்த இளைஞனின் சட லம் அருகே பச்சை நிற கைக்குண்டு ஒன்றும் காணப்பட்டது. இளைஞரின் சடலம் ஏறாவூர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதேவேளை மற்றொரு சம்பவத்தில் செளந்திரன் சந்திரகுமார் (வயது 23) என்ற மேசன் தொழிலாளி கொலை செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டுள்ளார். மட்டக்களப்பு ஐயங் கேணிசபுரத்தில் நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம் பெற் றுள்ளது. இரு சம்பவங்கள் குறித்தும் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-5)

# ஜிடேனை நேருக்கு நேர் சந்திப்பதைத் தவிர்ப்பதற்காக மற்ரஸி அவசரமாக ஆஜராகி பிபா விசாரணைக் குழுவிற்கு விளக்கமளித்தார்



(ஜுரிசி)

ஜிடேனை நேருக்கு நேராக சந்திப்பதை நேற்று முன்தினம் தவிர்த்துவிட்டார் மற்ரஸி. பிபா ஒழுங்கு விசாரணை குழுவிற்கு முன்பு அவர் மட்டும் தனியாக ஆஜராகி விளக்கம் அளித்தார். இப்பிரச்சினைக்கு எதிர் வரும் 20ஆம் திகதி பிபா தீர்ப்பளிக்க விருக்கிறது.

ஜேர்மனியில் 18ஆவது உலக கோப்பை உதைபந்தாட்டத் தொடர் நடந்தது. இறுதிப் போட்டியில் இத்தாலி அணி பிரான்ஸை வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது. இப்போட்டியின் போது பிரான்ஸ் அணித் தலைவர் ஜிடேன் இத்தாலி வீரர் மற்ரஸியின் நெஞ்சில் தலையால் முட்டி கீழே தள்ளினார். உடனே ஜிடேன் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

**ஜிடேன் விளக்கம்**

இது தொடர்பாக பேட்டி அளித்த ஜிடேன் தனது தாய் மற்றும் சகோதரியை திரும்பத்திரும்ப தகாத வார்த்தைகளால் மற்ரஸி திட்டியதாக கூறினார். அதனால்தான் அவரை முட்டி தள்ளியதாக விளக்கம் அளித்தார். இதையடுத்து சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு (பிபா) மற்ரஸி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடிவு செய்தது. ஜிடேன் மற்றரைரஸியை நேருக்கு நேர் விசாரணைக்காக வரும் 20இல் ஆஜராகும்படி முறைப்படி கடந்த வியாழக்கிழமை கட்டளை நகல் அனுப்பியது.

**அவசரமாக ஆஜர்**

அடுத்த வாரம் விடுமுறையில் செல்ல இருப்பதால் முன்னதாக ஆஜராக விருப்பம் தெரிவித்தார் மற்ரஸி. இதை தொடர்ந்து பிபா ஒழுங்கு நடவடிக்கை குழு அவசர அவசரமாக கூடியது. ஒரே இரவில் ஆதாரங்களைத் திரட்டிய மற்ரஸி நேற்று முன்தினம் காலை சுவிற்சர்லாந்தின் ஜுரிச்சில் உள்ள பிபா தலைமையகத்துக்கு வந்தார். பின்னர் ஒழுங்கு விசாரணைக்குழு முன் ஆஜராகி விளக்கம் அளித்தார். இவரிடம் ஜிடேனை தூண்டியது தொடர்பான கேள்விகள் கேட்கப்பட்டன. அப்போது தனது தரப்பு நியாயங்களை எடுத்துக் கூறினார் மற்ரஸி. பின்னர் காத்திருந்த நிருபர்கள் கூட்டத்தை புறக்கணித்து காரில்பறந்து சென்றார்.

முன்னதாகவே ஆஜரானதன் மூலம் வரும் 20இல் நடக்க இருந்த நேருக்கு நேர் விசாரணையில் ஜிடேனை சந்திப்பதை தவிர்த்தார் மற்ரஸி. ஜிடேன் தனது தரப்பு வாதங்களை எழுத்துபூர்வமாக நாளை மறுதினம் தரவேண்டும். பின்னர் எதிர் வரும் 20இல் பிபா ஒழுங்கு விசார ணைக் குழு முன்பு நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும்.

**மற்ரஸி மறுப்பு**

ஜிடேனை கடுப்பேற்றியது உண்மைதான் என ஒத்துக்கொண்ட மற்ரஸி அவரது தாய் மற்றும் சகோதரியை பழிக்கவில்லை என்று ஏற்கனவே கூறியிருந்தார். இவர் விசாரணையின் போது இதையே தான் சொன்னாரா என்பது தெரியவில்லை. இதுபற்றி பிபா செய்தித் தொடர்பாளர் நிக்கோலஸ் மெயின்காட் கூறுகையில்,

மற்ரஸியிடம் தேவைப்பாட்டால மீண்டும் விசாரணை நடத்தப்படும். ஒழுங்கு விசாரணை குழுவில் அவர் கூறிய விடயங்களை இப்போது தெரிவிக்க இயலாது என கைவிரித்தார்.

**தண்டனை என்ன?**

ஜிடேன் - மற்ரஸி மோதலில் பிபா தீர்ப்பு வரும் 20 இல் வெளியாகலாம் எனத் தெரிகிறது. மற்ரஸி அவமதிப்பு செய்தது உண்மையானால் அவருக்கு இரண்டு போட்டித் தடை மற்றும் ரூ. 3இலட்சத்து 57 ஆயிரம் அபராதமாக விதிக்கப்படும். இனவெறியை தூண்டும் விதமாக பேசியிருந்தால் 5 போட்டித் தடை மற்றும் 5 இலட்சத்து 94 ஆயிரம் அபராதமாக விதிக்கப்படும். ஜிடேன் ஓய்வு பெற்றுவிட்டால் அவருக்கு அபராதம் மற்றும் தங்க பந்து விருது பறிக்கப் படக்கூடும். இப்போதைக்கு தண்டனை பற்றி எதுவும் சொல்ல முடியாது. ஒவ்வொரு வழக்கும் ஒவ்வொரு விதமானது. முந்தைய சம்பவங்களோடு ஒப்பிட முடியாது என்று பிபா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காறித் துப்பிய டோட்டி**

மற்ரஸிக்கு தண்டனை அளிக்க தேவையில்லை என அவரது ஏஜன்ட் கிளாடியோ விகோரலி தெரிவித்தார். இவர் கூறுகையில்

தவறான செயலில் ஈடுபட்டவர் மீது தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக களத்தில் சில வார்த்தைகளை சொன்னதற்காக நடவடிக்கை எடுத்தால் பிற்காலத்தில் பிபா நிறைய வீரர்களைத் தண்டிக்க வேண்டியிருக்கும்.

2004 இல் நடந்த யூரோ கோப்பை தொடரில் இத்தாலியின் பிரான்சஸ்கோ போட்டி டென்மார்க்கின் கிறிஸ்டியன் பால்சனை நோக்கி துப்பினார். உடனே டோட்டிக்கு 3 போட்டி தடை விதிக்கப்பட்டது. ஆனால் டோட்டியை தூண்டிய பால்சன் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. பால்சனை தண்டிக்காத பிபா இப்போது மற்ரஸி மீது நடவடிக்கை எடுப்பது வினோதமாக உள்ளது என்றார்.

**நேரில் பார்க்காத நடுவர்**

மற்ரஸியை ஜிடேன் தலையால் முட்டிய சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என இறுதிப் போட்டி நடுவராக பணியாற்றிய குரோசியோ எலிசாண்டா ஒத்துக்கொண்டுள்ளார். இவர் கூறுகையில்,

நான் களத்தின் வேறு பகுதியில் இருந்தேன். அதனால் மற்ரஸி என்ன சொன்னார் என்பதை கேட்கவில்லை. ஆனால் மற்ரஸி கீழே விழுந்ததை பார்த்தவுடன் போட்டியை நிறுத்தினேன். அப்போது துணை நடுவர் டேரியோ கார்சியோ நான்காவது அதிகாரி லூயிஸ் மெடினா கான்டேலஜோ சொன்ன தகவலை தெரிவித்தார். இதன் அடிப்படையில் சிவப்பு அட்டை காண்பித்து வெளியேற்றனேன். ஜிடேன் செயலை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது. அவருக்கு சிவப்பு அட்டை காட்ட நான் தயக்கம் காட்டவில்லை. நடுவர் பணியிலிருந்து ஓய்வுபெற முடிவு செய்துள்ளேன் என்றார்.

**சம்பவத்தைப் பார்த்த மெடினா**

பிரான்ஸ் பயிற்சியாளர் ரேமண்ட் டொமினிக் ஒளிப்பதிவு மீள் பார்வையில் பார்த்து தான் ஜிடேனை களத்திலிருந்து நடுவர் வெளியேற்றினார் என்று குற்றம் சாட்டினார். இதை மறுத்த நான்காவது அதிகாரி லூயிஸ் மெடினா கான்டேலஜோ கூறுகையில்,

நான் நடந்த சம்பவத்தை நேரில் பார்த்தேன். ஒளிப்பதிவு மீள் பார்வையை நம்பி எதுவும் கூறவில்லை. பந்து வேறு பக்கம் இருந்ததால்நடுவரின் கவனம் திசைமாறியது. களத்தில் வீரர்களை கவனிப்பதும் எங்களது பணி. நடுவருக்கு உதவி செய்வது எங்களது கடமை. அதை நான் செய்தேன். இச்சம்பவம் உதைபந்தாட்டத்தில் நான்காவது அதிகாரியின் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளது. மற்ரஸி என்ன சொன்னார் என்பது தெரியாது. நான் பார்த்ததை மட்டுமே நடுவரிடம் கூறினேன் என்றார்.

**இங்கிலாந்து– பாகிஸ்தான் டெஸ்ட் தொடர்**

## இங்கிலாந்து- முதலாவது இன்னிங்ஸில் 9விக்கெட் இழப்பிற்கு 528 ஓட்டங்கள்

(லோட்ஸ்)

இங்கிலாந்து சுற்றுப்பயணம்மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இதன் முதலாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி முதல் நாள் ஆட்ட நேர முடியில் 3 விக்கெட் இழப்பிற்கு 309 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஆட்டமிழக்காமல் ஹொலின்வூட் 109 ஓட்டங்களையும் குக் 101 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். இரண்டாவது நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 9



விக்கெட்டுக்களை இழந்து 528 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடை நிறுத்தியது.

இதில் துடுப்பாட்டத்தில் ஹொலின்வுட் 186 ஓட்டங்களையும் குக் 105 ஓட்டங்களையும் பெல் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக டினேஷ் கனேரியா 3 விக்கெட்டுக்களையும் அப்துல் ரஷாக் 2 விக்கெட்டுக்களையும் மொகமட் ஸமி உமர் குல் மற்றும் அப்ரிடி ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.


தொடர்ந்து தனது முதலாவது இன்



னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் இரண்டாவது நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 66 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் இம்ரான் பர்காத் 33 ஓட்டங்களையும் மற்றும் ஆட்டமிழக்காமல் மொகமட் யூசுப் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்




பாக ஹர்மிசன் 2 விக்கெட் டுக்களையும் பிளங்கெற் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

**விளையாட்டு செய்திகள்**

**அமிர்தன்**

## 3 மாதங்களிற்கு விளையாடமாட்டார் தெ.ஆபி. அணித்தலைவர் ஸ்மித்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் தலைவர் கிரேம் ஸ்மித்துக்கு வலது கணுக்காலில் காயம் ஏற்பட்டுள்ளது. அதற்காக அவர் அறுவை சிகிச்சை செய்துகொண்டுள்ளார்.

ஆகவே குறைந்தபட்சம் அடுத்த 3 மாதங்களுக்கு அவரால் கிரிக்கெட் போட்டிகள் எதிலும் கலந்துகொள்ள முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காயம் காரணமாக இலங்கையில் இம்மாதம் தொடங்கவுள்ள டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் ஸ்மித் பங்கேற்க மாட்டார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இவருக்குப் பதிலாக 29 வயது ஆஷ்வெல் பிரின்ஸ் தற்காலிக அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்மித்துக்குப் பதிலாக அணியில் விளையாட இடக்கை வீரர் ஜேக்ஸ் ருடோல்ப் சேர்க்கப்பட்டுள்ளார்.

போட்டிகளில் பங்கேற்க முடியாததில் வருத்தம் ஏற்பட்டுள்ளது என்றாலும் எமது அணியினர் சிறப்பாக செயல்படுவர் என நம்புகிறேன்.

ஆஷ்வெல் தலைமையில் இலங்கை சுற்றுப்பயணத்தை தென்னாபிரிக்க அணி வெற்றிகரமாகவே எதிர்கொள்ளும் என்றார் ஸ்மித்.

அடுத்தவாரம் தென்னாபிரிக்க அணி இலங்கைக்கு வருகிறது. இங்கு 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கிறது.

இப்போட்டி முடிந்ததும் எதிர்வரும் ஆகஸ்ட் 14ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தியா , இலங்கை அணிகளுடன் முத்தரப்பு கிரிக்கெட் தொடரில் தென்னாபிரிக்கா கலந்துகொள்கிறது.

## இலங்கையில் நடைபெறும் முக்கோணத் தொடரில் மாற்றம்

இல்ங்கையில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள முக்கோண ஒருநாள் தொடருக்கான போட்டி அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் பங்கேற்கும் இத்தொடர் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

முன்னர் இத் தொடரில் ஏழு ஆட்டங்களையும் கொழும்பு மற்றும் தம்புள்ளையில் நடத்தத்திட்டமிட்டிருந்ததுடன் அனைத்துப் போட்டிகளையும் பகல் இரவு ஆட்டங்களாக நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் போட்டி அட்டவணையில் சிறிது மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி அனைத்துப் போட்டிகளும் கொழும்பில் நடத்த முடிபு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இரண்டு ஆட்டங்கள் மட்டும் பகல் இரவு ஆட்டங்களாக நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபையின் செய்தித்தொடர்பாளர் தெரிவிக்கையில் இந்திய தென்னாபிரிக்க அணிகள் பாதுகாப்புக் காரணங்கள் கருதி இட மாற்றத்தைச் செய்யுமாறு கேட்டிருந்தனர். இதற்கமைவாகவே இம் மாற்றம் செய்யப்பட்டது என்றார் அவர்.

இறுதிப்போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் 29 ஆம் திகதி பகல் இரவு ஆட்டமாக நடைபெறும்.

# படையினர் ஊடுருவித் தாக்குவது பாரிய மோதலுக்கே வழி வகுக்கும்

## விடுதலைப்புலிகள் எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் படையினர் ஊடுருவி தாக்குதல் நடத்த முற் படுவது பாரிய மோதலுக்கே வழி வகுக்கும் என விடுதலைப் புலிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இது தெடார்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மட்டக்களப்பு மாவட்டம் எமது, கட்டுப்பாட்டுப்பகுதியை சேர்ந்த வட முனை மற்றும் வாகனேரி மக்கள் குடியிருப்பு மீது இராணுவத்தினர் வியாழக்கிழமை இரவு தொடக்கம் கண்மூடித்தனமாக எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்

அத்துடன் எமது கட்டுப்பாட்டு பகுதிக்குள் ஊடுருவிய படையினர் வாகனேரி கிராமத்தையும் தாண்டி குளத்துமடு பகுதிவரை அத்துமீறி வந்து தாக்குதலை நடத்தியுள்ளனர். படையினரின் மோசமான நடவடிக்கையினால் அப்பகுதியிலுள்ள மக்கள் தற்போது அச்சம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

போர்நிறுத்த மீறல் மட்டுமல்லாது பாரிய போரை தொடங்குவதற்கான ஒரு ஆத்திரமூட்டல் நடவடிக்கையாகவும் இதை நாம் கருதுகிறோம். அரசும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சமாதானத்தை ஏற்படுத்த போவதாக சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தும் வகையில் சர்வகட்சி மாநாடு தீர்வுத்திட்ட யோசனைக்கான ஆலோசனையெனக் கூறிக்கொண்டு மறுபுறம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்துவது மஹிந்த ராஜபக்ஷவின் போர்முகத்தை காட்டுகிறது.

எனவே இவ்வாறான நடவடிக்கையில் தொடர்ந்து படையினர் ஈடுபடாதவாறு உடன்நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பகுதிகளின் இயல்பு நிலையை ஏற்படுத்துவதுடன் எமது தாயகப்பகுதியில் இவ்வாறான நடவடிக்கைகள் எதிர்காலங்களில் ஏற்படாதவாறு இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை போர் நிறுத்த கண்காணிப்பாளர்களாகிய நீங்கள் ஆக்க பூர்வமாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இத்தாக்குதலை தமிழீழ விடுதலைப்புலிகள் மிக வன்மையாக கண்டிப்பதுடன் இது பூரண யுத்த மீறல் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம் எனக் கூறப்பட்டுள்ளது. (கு)

## தேசிய அரசாங்கம் அமைக்க உதவுமாறு ரணிலிடம் கோரிக்கை

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்க ஒத்துழைக்குமாறு பொலநறுவ ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர சிறி சூரியராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில் நாடு எதிர்நோக்கியுள்ள முக்கிய சூழ்நிலையில் தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமானதுஎன்று தெரிவித்துள்ளார்.

மேலும் மகாவலி அபிவிருத்தி அமைச்சுப் பொறுப்பை நவீன் திஸநாயக்கவுக்கு அளிக்கக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மத்திய மாகாண முதல்வர் சரத் ஏக்கநாயக்க மத்திய மாகாண ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் சுஜீவ கவிரட்ண ஆகியோரும் இக்கோரிக்கையை ஆதரித்துள்ளனர். (கு)

## இளைஞர் முன்னணியின் மறுசீரமைப்பு நடவடிக்கையை மேற்கொள்ள ஐ.தே.க.முடிவு

(கொழும்பு)

இளைஞர் முன்னணியின் மறுசீரமைப்பு நடவடிக் கைகளை மேற்கொள்ள ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது. இளைஞர் முன்னணியின் தேர்தலை இந்த மாதம் நடத்த உத்தேசித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னணியின் அதிகார சபைகளை ஏற்படுத்தும் பணிகள் நடைமுறைரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதுவரை 154 அதிகார சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. தேசியரீதியிலான முன்னணியின் உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-9)

## தகவல் பற்றாக்குறையால் ஏற்படும் பிரச்சினைகள்

(கொழும்பு)

வழக்குகளுடன் தொடர்புடையவர்கள் வெளிநாடு களுக்கு செல்லும்போதும் அல்லது நாடு திரும்பும் போதும் கைது செய் யப்படுவதில் சில சிக்கல்கள் தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட நபர்கள் தொடர்பான தகவல்கள் நீதி மன்றத் தின் மூலம் வழங்கப்படும் போது அவற்றில் சில குறைபாடுகள் நிலவுவதே இத ற்கு காரணமென குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் அபயக்கோன் பண்டார தெரிவித்துள்ளார்.

எனவே வழக்குகளுடன் தொடர்புடைய நபர்களது பெயர்கள், முகவரிகள், அடையாள அட்டை இலக்கங்கள் அல்லது கடவுச்சீட்டு இலக்கங்கள் ஆகியவற்றை பெற்றுத் தருமாறு நீதிச் சேவை ஆணைக் குழுவிடம் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தத் தகவல்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு நீதிமன்றங் களுக்கு படிவங்கள் அனுப்பப் பட்டுள்ள போதிலும் சில சந்தர்ப்பங் களில் அந்தப் படிவங்கள் உரிய முறையில் பூர்த்திசெய் யப்படுவதில்லை என்று குடிவரவு குடியகல்வு கட்டுபாட்டாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக வழக்குக ளுடன் தொடர்புடையநபர்களின் பெயர்களைக் கொண்ட சிலரை விமான நிலையத்தில் தடுத்து வைக்க நேரிடுவதாகவும் அவர்களது அடையாளங் கள் உறுதிசெய்யப்பட்டபின்னர் அவர்களை விடுதலை செய்ய நடவடிக் கை எடுக்கப் படுவதாகவும் க்ட்டுப் பாட்டாளர் தெரிவித்துள் ளார். (கு-9)

## கடற்படையின் தலைமை அதிகாரியாக சரத் வீரசேகர நியமிக்கப்பட்டார்

(கொழும்பு)

கடற்படையின் தலைமை அதிகாரியாக சரத் வீரசேகர நியமிக்கப் பட்டுள்ளார். சரத் வீரசேகரை நியமித்து கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட கையொப்ப மிட்டுள்ளதாக மூத்த பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய கடற்படைத் தலைமை அதிகாரி சரத் ரத்ன கீர்த்திக்கு 6 மாத காலப்பணி நீட்டிப்பு வழங்கி வசந்த கரன்ன கொட பிறப்பித்த உத்தரவுக்கு மஹிந்த ராஜ பக்ஷ ஒப்புதல் அளிக்காத நிலை யில் சரத் வீரசேகர நியமிக்கப்பட்டுள் ளார்.

கடற்படை தலைமையகத்தில் நாளைதிங்கட்கிழமை நடக்கும் அணி வகுப்பு மரியாதையைத் தொடர்ந்து சரத் வீரசேக்கர தனது பொறுப்புக் களை ஏற்றுக்கொள்வார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக் கின்றன. (கு)

## பிரம்ம குமாரி மீரா அவர்களின் இலங்கை விஜயம்

### பிரமகுமாரி ராஜயோக நிலையம்- யாழ்ப்பாணம்

## About the Speaker

B.K Meera joined the Brahma Kumaris World Spiritual University at it's Mysore branch in 1968, after completing her Bachelor of Science degree at Mysore University, India. Since then she has been holding various positions in the branches of Brahma Kumaris World wide. At present she is the Director of Brahma Kumaris Raja Yoga Centres, South East Asia including Indonesia, Malaysia, Singapore and Thailand. During 1986, she toured extensively in more than 50 countries promoting the International Year of Peace project "The Million Minutes of Peace Appeal" and participated in the International Finale held in New York.



Along with the normal teaching experience, B.K Meera has been a much sought public speaker on a variety of topics. Her talks have taken place in Government Departments, Schools, Prisons, Lions, Women Organizations, Universities, Management training Institutes and other community associations. She has also participated in radio and television programmes and has spoken at International conferences.

## பேச்சாளரின் அறிமுகம்

BK மீரா அவர்கள் இந்தியாவின் மைசூர் பல்கலைக்கழகத்தில் தனது விஞ்ஞானமாணி பட்டப்படிப்பை முடித்த பின்னர், பிரம்ம குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழகத்தின் மைசூர் கிளையில் 1968ம் ஆண்டு சேர்ந்தார். அவர் பிரம்ம குமாரிகளின் உலகளாவிய கிளைகளில் பல்வேறு பதவிகளை வகித்துவந்துள்ளார். இப்பொழுது அவர் இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து உட்பட தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையங்களுக்கு இயக்குனராக இருக்கின்றார்.

அவர் 1986ம் ஆண்டு காலப்பகுதியில் 50இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விஜயம் செயது "அமைதிக்காக பல மில்லியன் நிமிடங்கள்" என்ற சர்வதேச அமைதி வருட திட்டத்தை நடைமுறைப்படுத்தி ஊக்கம் அளித்ததுடன், நியுயோர்க்கில் இடம்பெற்ற சர்வதேச இறுதி நிகழ்விலும் பங்குபற்றினார்.

சாதாரண கற்பிக்கும் அனுபவத்துடன், BK மீரா மக்களுக்கு பல்வேறு தலைப்புக்களில் சிறப்பு சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். அவர் அரசாங்கத் திணைக்களங்கள், பாடசாலைகள், சிறைச்சாலைகள், சங்கங்கள், மகளிர் ஸ்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், முகாமை பயிலுனர் நிறுவகங்கள், மற்றைய சமூக சபைகள் போன்றவற்றில் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். அவர் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியுள்ளார். சர்வதேச மாநாடுகளிலும் சொற்பொழிவாற்றவுள்ளார்.

**BK மீரா அவர்கள் ஜூலை 14ஆம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை இலங்கையின் பல பாகங்களிற்கு விஜயம் செய்ய உள்ளார். அவரின் நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு;**

ஜூலை 14 முதல் 17 வரை கொழும்பு -
ஜூலை 16 -அழைக்கப்பட்டவர்களுக்கான நிகழ்ச்சி
பொருள் - How to bring Happinees in Every Moment
ஜூலை 18 முதல் 20 வரை மட்டக்களப்பு -கல்முனை
ஜூலை 19 பொது நிகழ்ச்சி :- பி.ப 3.30மணி முதல் பி.ப. 5.00 மணிவரை
பொருள் :- மன அழுத்தத்தை மன வலிமையாக்கும் கலை
இடம்:- விபுலானந்த மணி மண்டபம் ,காரைதீவு
ஜூலை 21 முதல் 23 வரை- கொழும்பு
ஜூலை 22 பொது நிகழ்ச்சி
பொருள்:- மூன்றாவது கண்ணைத் திறத்தல்
இடம்:- சரஸ்வதி மண்டபம், லோறன்ஸ் றோட், பம்பலப்பிட்டி
ஜூலை 23 முதல் 24 வரை :- யாழ். நகர் விஜயம்
ஜூலை 26:-மாத்தளை
ஜூலை 27:-நாவலப்பிட்டி -பொது நிகழ்ச்சி
பொருள்:- மனவலிமையால் மனக்வலை போக்குதல்
இடம்:- நகரசபை மண்டபம், நாவலப்பிட்டி
பி.ப. 3.00 மணிமுதல் பி.ப.5 .00மணிவரை
ஜூலை 28:- நுவரெலியா
ஜூலை 29 முதல் 30 வரை- கண்டி
ஜூலை 31முதல் ஒகஸ்ட் 4 வரை -கொழும்பு

(C/406)

## இன்று ஒரு தகவல்

# மன்னிக்க வேண்டும்

ஒரு ஊரில் ஒரு மன்னர் இருந்தார். அவர் ஒரு நாள் தன்னுடைய அரசாங்கக் கணக்கு வழக்குகளைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். வரவு எவவளவு செலவு எவ்வளவு என்பதைப் பற்றியெல்லாம் அதிகாரிகள் விபரம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அரசாங்கத்திடம் கடன்வாங்கி அதை இன்னும் திருப்பிக் கட்டாதவர்கள் யாராவது உள்ளனரா என்று விசாரித்துக்கொண்டிருந்தார்.

அந்த சமயத்தில் ஒரு ஆளை அரச ஊழியர்கள் அழைத்துக்கொண்டுவந்தார்கள். இந்த ஆள் பத்தாயிரம் காசுகள் அரசாங்கத்துக்கு கடன் பட்டிருக்கிறார் என்றார்கள் . "ஐயா..! இப்போது எனது நிலைமை மிகவும மோசமாக இருக்கிறது. அந்தக் கடனை திருப்பிக் கட்ட முடியாத நிலையில் இருக்கிறேன் என்றான் அந்த ஆள். மன்னர் பார்த்தார் அப்படியென றால் இவனையும் இவனுடைய நிலங்களையும் இவனுடைய வீடுவாசலையும் இன்னும் என்ன இருக்கிறதோஅவ்வளவையும் விற்று அரசாங்கப்பணத்தை ஈடுகட்டுங்கள் என்று உத்தரவிட்டார்.

உடனே அந்த ஆள் பொத் என்று கீழே விழுந்தார். ஐயா என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் கூடிய விரைவில் எப்படியாவது எனது கடனைத் தீர்த்து விடுகிறேன் என்றான். மன்னிப்புக் கேட்டுவிட்டான் அல்லவா அதனால் உடனே மன்னர் மனம் மாறிவிட்டது அவனை விடுதலை செய்து விட்டார். அவனுடைய கடன் தொகையையும் தள்ளுபடி செய்து விட்டார் போய்வா என்றார்.

அவ்வளவுதான் இவன் ஆனந்தமாக வீட்டுக்குத் திரும்பினான். அவனது வீட்டில் வேலை செய்யும் ஒருவன் இவனிடம் கடன்பட்டிருந்தான்.அவன் இவனுக்கு 1000 காசுகள் தரவேண்டியிருந்தது. எப்போது தரப் போகிறாய்? என்று கேட்டான் அவன் விழித்தான் இவன் அவனது கழுத்தைப் பிடித்துநெரிக்க ஆரம்பித்தான். அவன் கத்தினான். காலில் விழுந்தான். என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் எப்படியாவது கடனைத் திருப்பித்தந்து விடுகிறேன் என்றான்.

அவன் இரக்கப்படவே இல்லை நீதிமன்றிற்குப் போய் இவனுக்குச் சிறைத்தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டான். கொஞ்ச நாளில் இந்த விடயம் மெதுவாக மன்னரின் காதுகளுக்கு எட்டியது. சிறையில் இருந்தவனின் நண்பர்கள் சிலர் இதை மன்னனிடம் கூறி விட்டனர் அவ்வளவுதான்.

உடனே அந்த ஆளைக் கூப்பிட்டார் இதோ பாரப்பா நீ என்னிடம் கடன் பட்டிருந்தாய். மன்னிப்புக்கேட்டாய் கொடுத்தேன் ஆனால் நீ? உன்னிடம் கடன்பட்டவன் மன்னிப்பு கேட்டிருக்கிறான் மன்னிக்க மறந்துவிட்டாய். நான் உனது கடனைத் தள்ளுபடி செய்தேன நீ அவனைச் சிறையில் தள்ளியிருக்கிறாய் நான் உன்னிடம் இரக்கம் காட்டியது போல் நீயும் உன் வேலையாளுக்கு இரக்கம் காட்டவேண்டும் அலலவா? நீ இரக்கம் காட்டவில்லை அதனால் உன கடன் தீரும்வரை. உன்னையும் சிறையில் அடைக்க உத்தரவிடுகிறேன் என்றார்.

இவனையும் சிறையில் கொண்டுபோய்த்தள்ளி கதவைச் சாத்திவிட்டார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது,? மன்னிபபைபுவிரும்புபவர்கள் மன்னிப்பதற்கும் தயாராக இருக்கவேண்டும் எனக்கு எதிராகப்பாவம் செய்பவர்களை நான் எத்தனை முறை மன்னிக்கலாம்? என்று சீடர்களில் ஒருவரான இராயப்பர் கேட்கிறார் இதற்கு இயேசு சொல்கிறார் எத்தனை முறை வேண்டுமானாலும் மன்னிக்கலாம்.

இந்த மனோபாவம் மனிதனை மனிதனாக்கும். மனித குலத்தை மேம்படுத்தும். இந்தக் காலத்தில் உள்ளவர்கள் இதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். தவறாகப் புரிந்துகொண்டு தடுமாறக் கூடாது.

எத்தனை முறை வேண்டுமானாலும் என்னை மன்னிக்கத்தயாராக இருக்கிறீகளா அப்பா? என்று கேட்டான் ஒரு பையன். "தயாராக இருக்கிறேன்" என்றார் அப்பா "அப்படியென்றால் முன்றாவது முறையாக உங்களிடம் ஒரு மன்னிப்புக் கேட்கிறேன்" என்றான் என்ன விஷயம்? என்றார் அப்பா. "இந்த முறையும் நான் கணக்கில் பெயில்" என்றான் மகன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் ஹோமாகமையில் உள்ளனர்

## சிங்கள நாளேடு தகவல்

(கொழும்பு)

பனாகொடை இராணுவ முகாமை உளவு பார்க்க வந்த பெருமளவு விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் ஹோமாகமை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வசிப்பதாக சிங்கள நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் பனாகொடை இராணுவ முகாமை அண்டிய பிரதேசங்களில் சந்தேகத்திற்கிடமான பெருமளவு தமிழ் இளைஞர்கள் வசிப்பதனால் இராணுவ முகாம் பாதுகாப்பற்ற நிலைக்கு உள்ளாகியிருப்பதாக இராணுவ புலனாய்வுப் பிரிவும் பலமுறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஹோமாகமை பனாகொடை உட்பட்ட பிரதேசங்களில் இருக்கும் ஆடைத்தொழிற்சாலைகள் உணவகங்கள் மற்றும் வாகனம்திருத்தும் இடங்களில் சிறு தொழில்களில் ஈடுபடுவதற்காக வெளியிடங்களில் இருந்து பெருமளவான தமிழ் இளைஞர்கள் வந்துள்ளனர். இந்த இளைஞர்களில் விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவு டன் தொடர்புடையவர்களும் இருப்பதாக இராணுவப் புலனாய்வுப்பிரிவிற்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இது தொடர்பாக பொலிஸாருக்கோ உரிய தரப்பினருக்கோ தெரிவிக்கப்பட்டாலும் சந்தேகத்திற்கிடமான தமிழ் இளைஞர்களிடம் உரிய வகையிலான விசாரணைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று இராணுவப் புலனாய்வுப்பிரிவு வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வெசாக் தினத்தன்று பனாகொடை இராணுவ விகாரையில் இரண்டு விடுதலைப்புலி உளவாளிகள் இராணுவப்புலனாய்வுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். அன்றைய தினம் அங்கு வெளிச்சக்கூடுகள் போட்டி நடைபெற்றதால் அந்த உற்சவத்தில் பெருமளவு இரா ணுவ அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அங்கு கைதுசெய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைகளுக்காக ஹோமாகமை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள் ளப்பட்ட விசாரணைகளின் போது பனாகொடை இராணுவ முகாமை உளவு பார்ப்பதற்காக விடுதலைப்புலி உளவாளிகள் ஹோமாகமை மற்றும் அதனையண்டிய பிரதேசங்களுக்கு வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அண்மையில் பனாகொடை இராணுவ முகாமை அண்டிய பிரதேசத்தில் சக்தி வாய்ந்த குண்டு கண்டு பிடிக்கப்பட்டு செயழிழக்கச் செய்யப்பட்டது. படுகொலை செய்யப்பட்ட மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க பனாகொடை கந்தலந்த பகுதியில் இருக்கும் இராணுவ உயரதிகாரிகளுக்கான உத்தயோகபூர்வ இருப்பிடத்திலேயே வசித்து வந்தார். அதற்கு முன்புறமிருக்கும் பல விற்பனை நிலையங்களில் பெருமளவான தமிழ் இளைஞர்கள் பணியாற்றி வருவதாகவும் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முக்கிய இராணுவ அதிகாரிகளின் போக்குவரத்துகள் குறித்து கண்காணிப்பதற்காக விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு தனது உறுப்பினர்கள் பலரை அங்கு அனுப்பியிருப்பதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். அங்கு தங்கியிருக்கும் தமிழ் இளைஞர்கள் பற்றி ஆராய்ந்து உரிய விசார ணைகள் நடத்தப்படாவிடின் பயங்கரமான நிலைக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படலாம் என்று புலனாய்வுப்பிரிவு தெரிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

### லெபனானில் வசிக்கும் இலங்கையர் பற்றி

## விபரமறிய விரும்பும் உறவினர்கள் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளலாம்

(கொழும்பு)

லெபனானில் தற்போது இடம்பெற்று வரும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விடயங்கள் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு லெபனானுக்கான இலங்கைத் தூதுவராலயத்துடன் தொடர்பை ஏற்படுத்தி விடயங்களை அறிந்து வருகிறது. அங்கு பணிபுரியும் இலங்கையர் எவரும் பாதிப் புக் குள்ளானதாக இதுவரை தகவல் எதுவும் வெளியாக வில் லை என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரி வித்துள்ளது.

அங்கு பணிபுரியும் இலங்கையர்களின் உறவினர் கள் மேலதிக விபரங்கள் எதனையும் பெறவிரும்பும் பட்சத் தில் லெபனானுக்கான இலங்கைத் தூதுவராலயத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

00961546808 அல்லது 00961592058 5, 00961592476 2, 00961545317 2 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு நேரடியாக லெபனானிலிருந்து தகவல்களை அறிய முடி யும்.

லெபனானில் பணிபுரியும் இலங்கையரை தமது வீடுகளிலோ அல்லது வேலைத்தளங்களிலோ பாதுகாப்பாக இருக்கும் படி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

இதுதவிர கொழும்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் விசேட கருமபீடம் ஒன்று ஸ்தாபிக்கப் பட்டுள் ளது.

உறவினர்கள் இந்த கருமபீடத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களை பெறமுடியுமென்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

கரும பீடத்துடன் தொடர்பை ஏற்படுத்த 2385625, 5362527, 4718972, 4719592, 24376356 ஆகிய தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (த-9)

## காங்கேசன்துறை இராணுவத் தடுப்பு முகாமில் உள்ளோரை உறவினர் பார்வையிட்டனர்

(கொழும்பு)

கடந்த 27ஆம் திக்தி மீசாலை புத்தூர்ச் சந்தியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் அவரது உறவினர்கள் காங்கேசன் துறை இராணுவ தடுப்புமுகாமுக்கு சென்று பார்வையிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கணேசமூர்த்திஜெயரூபன் (வயது 23), கணபதிப்பிள்ளை கிருசாந்தன் (வயது 19) ஆகிய இரு இளைஞர்களையும் ஜெயரூபனின் மனைவியும், கிருசாந்தனின் பெற்றோரும் சென்று பார்வையிட்டதாகவும் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் சட்ட ஆலோ சகர் றெமிடியஸ் , விசாரணை அதிகாரி மொறின் நிசாந்தினி ஆகியோர் இராணுவ கட்டளைத் தளபதியுடன் கலந்துரையாடி இரு இளைஞர்களையும் பார்வையிட அனுமதி பெற்று கொடுத்ததாக தெரி விக்கப்படுகின்றது. (அ-133)

# இராணுவத்தளபதி மீதான தாக்குதல்

## தற்கொலைதாரி எனக் கூறப்பட்டவர் இன்னும் உயிருடன் இருப்பதாகத் தகவல்

(கொழும்பு)

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியவர் என அடையாளம் காணப்பட்டிருந்த கணபதிப்பிள்ளை மஞ்சுளாதேவி என்பவர் உயிருடன் இருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது என்று இரகசிப் பிரிவு வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

முதலில் ரம்புக்கனையிலும் பின்னர் வெலிவேரியவிலும் வசித்து வந்த தற்கொலைதாரி மஞ்சுளாதேவி என அடையாளம் காணப்பட்டதுடன் அவரின் அடையாள அட்டையையும் இரகசியப் பிரிவினர் கண்டுபிடித் திருந் ததாக கூறப்பட்டது.

பின்னர் மஞ்சுளாதேவி சிறுவயதில் தங்கியிருந்ததாகக் கூறப்படும் அநுராதபுரம் புத்தளம் வீதியிலிருக்கும் வீட்டிற்குச் சென்ற இரகசியப் பிரிவினர் மஞ்சுளாதேவியின் பெற்றோரிடம் அவரின் புகைப்படத்தைக் காண்பித்து விவரங்களைக் கேட்டபோது புகைப்படத்தில் இருப்பது தங்க ளின் மகள் அல்ல என்றும் அவர்கள் கூறி யுள்ளனர்.

அந்தப் பெயரைக்கொண்ட தங்களின் மகள் கிளிநொச்சியில் வாழ்ந்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அவர் 6 மாதங்களுக்கு முன்னரும் கிளிநொச்சியிலிருந்து தங்களின் வீட்டிற்கு வந்து சென்றதாகவும் அந்தப் பெற்றோர் கூறியதாக இரகசிப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

அவர் அடிக்கடி தங்களுடன் தொலைபேசியில் உரையாடுவதாகவும் இந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தின் பின்னரும் அவர் தங்களுடன் தொடர்பு கொண்டதாகவும் அந்தப் பெற்றோர் கூறியுள்ளனர்.

இதற்கமைய மஞ்சுளாதேவி என்பவர் உயிருடன் இருப்பது உறுதியாகியுள்ளது. தற்கொலை தாரியின் உண்மையான பெயர் மஞ்சுளாதேவி இல்லை என்றும் அந்த பெயரைப் பயன்படுத்தி போலி அடையாள அட்டை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இரகசியப் பிரிவினர் சந்தேகிக்கின்றனர்.

இந்த கண்டுபிடிப்பினையடுத்து இராணுவத் தலைமையக குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகள் வேறு பக்கம் திரும்பியிருப்பதாக இரகசியப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தற்கொலைதாரிக்கு மஞ்சுளாதேவி என்ற பெயரில் அடையாள அட்டையை தயாரித்து வழங்கிய ரம்புக்களையைச் சேர்ந்த சிங்கள கிராம அலுவலகரும் இரகசியப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிங்களப் பெண்ணை மணமுடித்துள்ள வெலி வேரியவைச் சேர்ந்த தமிழரே 5000 ரூபாவைக் கொடுத்து தற்கொலைதாரிக்கு இந்த அடையாள அட்டையைத் தயாரித்துக்கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய தாக்குதலை நடத்திய தற்கொலைதாரி யாரென்பதைக் கண்டறிவதற்காக இரகசியப் பிரிவினர் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (கு)

# இந்தியா செல்கிறார் ரணில் விக்கிரமசிங்க



எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது குழுவினடன் இந்தியாவுக்கு ஐந்து நாள் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் புதன் கிழமை ரணில் மேற்கொள்ளும்இப்பயணத்தில் ஜி.எல்.பீரிசும் இடம்பெற்றுள்ளார்.

இந்தியா செல்லும் ரணில் விக்கிரமசிங்க, இந்திய பிரதமர் மன்மோகன்சிங் உள்ளிட்ட தலைவர்களைச் சந்தித்து வடக்கு-கிழக்கு நிலைமைகள் குறித்து ஆலோசனை நடத்துவார் என்று கூறப்படுகிறது.

இந்தியா செல்லும் ரணிலின் குழுவில் மஹிந்த அரசாங்கம் பக்கம் தாவக்கூடியோர் பட்டியலில் முதன்மையாக இடம்பெற்றுள்ள மிலிந்த மொறகொடவும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

# பாடசாலை மாணவரிடையே கேள்விப் புதிர்ப் போட்டி!

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக பாடசாலை மாணவர்களிடையே கேள்விப் புதிர்ப் போட்டியினை நடத்துவதற்கு பவ்ரல் அமைப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பான அறிவினை வளர்க்கும் நோக்கில் மாவட்ட மட்டத்திலும் அகில இலங்கை ரீதியாகவும் இக்கேள்விப் புதிர்ப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்வதற்கு தகுதியானவர்கள் எழுத்து மூலப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவுசெய்யப்படவுள்ளதாகவும் நாட்டின் அனைத்து பாகங்களிலும் க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவ மாணவியர் இப்போட்டியில் கலந்துகொள்ள முடியுமெனவும் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

எழுத்துப் பரீட்சையானது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நிறுவப்படும் நிலையங்களில் ஒரே தினத்தில் நடைபெறும். ஒரு பாடசாலையிலிருந்து நான்கு போட்டியாளர்கள் மட்டுமே கலந்துகொள்ள முடியுமென்றும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

பவ்ரல் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள இப்போட்டிக்கான மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு அமைய தயாரித்து பூர்த்தி செய்து தாம் கல்வி கற்கும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பவ்ரல் அமைப்பு, இலக்கம் 12/3 றொபர்ட் டெரஸ், றொபட் குணவர்தன மாவத்தை, கொழும்பு-06 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதோடு இதுதொடர்பான மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 011-5557010 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-7)

# செல்லப் பிராணிகளையும் தம்முடன் கொண்டுசெல்லும் அகதிகள்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு செல்லும் அகதிகள் அபாயமான பயணங்களுக்கு மத்தியிலும் செல்லப்பிராணிகளையும் தம்முடன் எடுத்துச் செல்கின்றனர்.

இந்த செல்லப் பிராணிகளை இந்திய பொலிஸ் அதிகாரிகளும் வரவேற்கின்றனர்.

அகதி முகாம்களுக்கு அகதிகள் என்ற போர்வையில் தமிழீழ விடுதலைப் புலிகள் வருவதைக் காட்டிலும் அகதிகளுடன் செல்லப் பிராணிகள் வருவதை தாம் வரவேற்பதாக தமிழ் நாட்டின் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் முதல் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்று வருவதையடுத்து இதுவரை இலங்கையிலிருந்து சுமார் 4 ஆயிரம் அகதிகள் தமிழ் நாட்டிற்கு சென்றுள்ளார்கள்.' (த-9)


# நாயன்மார் நால்வர் எழுந்தருளல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நமது ஈழத்திருநாட்டில் சாந்தி சாமாதானம் சுபீட்சம் வேண்டி தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய நாயன்மார் நால்வர் திருவுருவச் சிலைகளை யாழ். குடாநாட்டு ஆலயங்களில் எழுந்தருளச் செய்து மாதம் ஒரு கோயில், மாதம் ஒருதிருமுறை முற்றோதல் என பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதப்பட்டு வருகிறது.

இன்று மாலை 4.00 மணிக்கு யாழ். நீராவியடி கடையிற்சுவாமி சிவன் ஆலயத்தில் மூன்றாந்திருமுறை முற்றோதல் நடைபெறும்.


மாலை 5.00 மணியளவில் நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகை சமேத ஸ்ரீ கைலாசநாதர் தேவஸ்தானத்திற்கு எழுந்தருளி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயப் பூசையைத் தொடர்ந்து நான்காந் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகித் தொடர்ந்து தினமும் மாலை பூசையுடன் முற்றோதல் பாராயணம் நடைபெறும். (து)



கடந்த கால யுத்த அனர்த்தத்தால் சேதமடைந்து பின்பு புனரமைக்கப்பட்ட ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலயத்தின் தற்போதைய தோற்றத்தை படத்தில் காணலாம்.

(படம் - வி.பிரான்சீஸ்)

# மட்டக்களப்பு நகரில் மனிதச் சங்கிலிப் பிரார்த்தனை



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்று முன் தினம் சமாதானத்தை வலியுறுத்தி மனித சங்கிலிப் பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

முற்பகல் 9.30 மணிமுதல் 10.30 மணி வரைஇந்த நிகழ்வு இடம்பெற்றது. மூவினங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற இந்த நிகழ்வை தன்னார்வ நிறுவனங்களின் அமையம் ஏற்பாடு செய்தது.

பாடசாலை மாணவர்கள் பெருமளவில் இதில் பங்கேற்றனர். அவர்கள் போர் வேண்டாம் சமாதானமே வேண்டும் என்ற கோஷத்தை எழுப்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த நிகழ்விற்கு பொலிஸாரும் படையினரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். (த-9)

# மேலும் ஒரு சந்தேகநபர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

16 ஆண்டுகாலமாக பொலிஸில் பணிபுரிந்து வந்த தமிழர் ஒருவரை விடுதலைப் புலி சந்தேக நபர் என்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வீரம்புகெந்திர பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்த அவருக்கும் தமிழ் வர்த்தகர் ஒருவருக்கும் தொடர்பிருப்பதாக சந்தேகிக்கப்பட்டதையடுத்து அவர் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் பொலிஸில் போலி ஆவணங்கள் கொடுத்து சேர்ந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மூத்த பொலிஸ் அதிகாரியின் பரிந்துரையில் அவர் கடமையில் சேர்க்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தற்போதும் பணி புரிவதாகவும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பொலிஸ் நிலையங்களில் இந்த விடுதலைப் புலி சந்தேக நபர் பணியாற்றியதாகவும் கிளிநொச்சியில் இராணுவத்தினர் மீதான தாக்குதலில் அவர் பங்கேற்றதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (து)

# 26 ஆவது நாளாக தொடரும் உண்ணாவிரதப் போராட்டம்

தமிழர் தாயகத்தில் இடம்பெற்று வரும் தமிழ்மக்கள் மீதான படுகொலைகளைக் கண்டித்து பிரான்சில் நடத்தப்பட்டுவரும் கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்தினம் 26ஆவது நாளாக பிரான்ஸ் புரட்சியின் நினைவுச் சின்னம் அமைந்த பஸ்ரில் என்னும் இடத்தில் நடைபெற்றது.

காலை 10.00 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றலின் பின் பிரான்ஸின் சுதந்திர தினமான நேற்று முன்தினம் பிரெஞ்சுத் தேசியக் கொடியுடன் தமிழர் தாயகக் கொடியும் ஏற்றப்பட்டு அகவணக்கத்துடன் இந்நிகழ்வு ஆரம்பமாகியது. ஜியான் தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து நல்லுஸ்தான் விளையாட்டுக்கழக உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இக்கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம் பல வெளிநாட்டு மக்களையும் பிரெஞ்சு மக்களையும் கவர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய தலைமைக்கும் தாயகத்தில் எமது மக்களின் இன்றைய சூழ்நிலை பற்றியதுமான அஞ்சல் அட்டைகள் தமிழ் இளையோர் அமைப்பினரால் மக்களின் கையெழுத்து பெறப்பட்டு அனுப்பப்பட்டு வருகின்றது.

இன்றைய நிகழ்வில் 200க்கும் மேலான பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். (து)







# நன்மை செய்யாத போதே எம்மை தோல்விகள் தொடர்கின்றன



பின்னர் நடக்கப் போகும் விடயங்களை முன்னமே கூறுபவர்களை, தீர்க்கதரிசிகள் என்று அழைப்பார்கள். இவர்கள் நீண்ட காலங்களுக்கு முன்னமே பின்னர் நடக்க வேண்டிய செயல்களை தீர்க்கதரிசனமாக மக்களுக்கு அளித்து மக்களின் வாழ்வில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

இறை வனும் தமது திருவுள விருப்பங்களை இறைவாக்கினார்கள்எனப்படுவோரால் வெளிப்படுத்திக் கூறிவைத்தார். அவர்களின் வார்த்தைகளைச் சிலர் செவிமடுத்தார்கள். பலர் அலட்சியம் செய்தார்கள். ஒரு இடத்தின் நற்பெயர் குறிக்கப்படும் ஒருவர் மூலமாகவே உயர்வடையும் என்பதை ஏற்கனவே முன் குறித்து வைத்தார் இறைவன். அதேபோல ஒவ்வொருவர் பற்றியும் இறைவன் முன்குறித்து வைத்துள்ளார். இக் கருத்தினை எபேசியர் திருமுகம் 1:6 இல் காணலாம்.

### இறை திட்டத்தின் வெளிப்பாடு

திருச்சபையானது உலகிற்கு ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம்உண்டு. அப்பணிகளைச் செய்வதற்கு முன்வருவோர் மிகச் சொற்பமானவர்களே. பணி ஆற்றுவோரும் புடமிடப்படுகின்றார்கள். எமது வாயின் வார்த்தைகளே எமக்கு விடுதலையையும் நிலை வாழ்வையும் பெற்றுத்தர வல்லவைகளாக இருக்கின்றன. இயேசு தம் சீடர்களை நற்செய்திப் போத னைக்கு வழிநடத்துதலிலே எம் வாழ்வானது கட்டி எழுப்பப் பட வேண்டும். ஆவியானவர் மூல மே எமக்கு விடுதலை உண்டு.

'இறைவன், இயேசுக் கிறிஸ்து மூலமாகவே தமக்குச் சொந்த மாக்கிக் கொள்ள அன்பினால்

## பரமபிதா காட்டிய பாதை

அனுப்பிய போது " உங்களுக்கு செவி சாய்க்கின்றவன் எனக்கு செவி சாய்க்கின்றான்" என்று கூறினார். முன் குறித்தவர்கள் மூலமாகவே இறைதிட்டம் வெளிப்படுத்தப்படுவதை இன்று நாம் காண்கின்றோம். சாதாரண பாவியையும் சரித்திரம் போற்றும் நாயகனாக மாற்றுவதும் இறைசித்தம் என்ப தை நாம் ஏற்றுக்கொள்ள வேண் டும்.

### நன்மைத்தனங்களே முதலீடு

எங்கே பிறந்து எங்கே வளர்ந்து திருமணத்தின் மூலம் இணைக்கப்படுகின்றார்கள் அல்லது நண்பர்களாக, மாணவர்களாக, உடன் உழைப்பாளர்களாக எத்தனையோ வழிகளில் இணைக்கப்படு கின்றார்கள். இவையெல்லாம் நடை பெறும் என்று எவரும் எதிர் பார்த்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது.

காலம் வரும்போது கடவுளின் வார்த்தைகள் நிறைவுள்ளவைய ாகப் பலன் அளிக்கும். நாம் எண்ணிவிடக்கூடாது. நம்மிலேதான் அனைத்தும் நடக்கின்றன என்று. தோல்விகள் நம்மைத் தொடர்கின் றன என்றால் எம்மில் நன்மைத் தனங்கள் செயற்படுவ தில்லை. நன்மைத்தனங்களே தோல்விடை யாத முதலீடு ஆகும்.

### கிறிஸ்துவுக்குள் வாழ்வு

ஆண்டவருடைய ஆவியான வரின் முன்குறித்துவைத்தார்" எனவே நாம் எல்லோரும் இறைவனின் சுவிகார மக்களாக இருக்கின் றோம். அப்படி இருக்கும் போது ஏன் நம்மிடையே பகைமை, வெறுப்பு, அநீதி தலை விரித்தாடுகின்றது. என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லைஎன்று கொரிந்தியர் மடலில் புனித பவுலடிகளார்கூறியதுபோன்று நன்மை செய்ய எமது மனப்பாங்குகள் இடம் தரமறுக்கின்றன. ஊனியல்பின் நாட்டங்களால் கூறியது போன்று நன்மை செய்ய எமது மனப்பாங்குகள் இடம் தர மறுக் கின்றன.

### புதுப்படைப்பாவோம்

ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுப்படைப்பாகின்றான். அவரோடு சேர்ந்து அறிவடை செய்பவன் வான் வீட்டின் களஞ்சியத்தை நிரப்புகின்றான்.

**யாழ்ஜெயம்தாசன்**

எம் வாழ்வு எப்படிப்பட்தாக இருக்கின்றது? எம் வாழ்வுப் பாதை ஏன் இன்னும் மாறவில்லை? கொ லை வெறியே எம் அடிமன தில் புதையுண்டு கிடக்கின்றது.

அன்புக்காக ஏங்கும் உள்ளங்களுக்கு ஆறு தல் அளிக்கின்ற நல்ல உள்ளங்கள் பெருகிடவும் அமைதி வாழ்வால் அகிலம் தழைத்தோங் கிடவும், வன்முறைகள் ஒழிந்து சுபீட்சமான வாழ்வு மலர வும் நன்மைத் தனங் களின் ஊற்றுக் களாகட்டலன்கொடுப்போம். □

# அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (1)

யாழ்பாணம் என்னுமிடத்திலுள்ள/
மாவட்ட நீதிமன்றத்தில்
செல்வரத்தினம் சண்முகஜெகஞானம்,
நல்லூர்-யாழ்ப்பாணம்

வழக்கு இல:மணநீக்கம்/572

| எதிர் | வழக்காளி |
|---|---|
| சண்முக ஜெகஞானம் | பெண் கௌசிகி, |
| கறுக்காய் தீவு, | பூநகரி. |

எதிராளி/

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு/

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி தனக்கும் எதிராளிக்கும் 05.02.1988ஆம் திகதியன்று நடைபெற்ற விவாகப் பதிவை, தன்னை எதிராளி வேண்டுமென்று வன்மையாகத் துறந்தார் என்ற காரணத்துக்காக ரத்துச் செய்து ஒரு மணநீக்கத் தீர்வையை மன்று வழங்கவேண்டும் என்றும் இவ் வழக்கின் செலவுகளை எதிராளி வழக்காளிக்கு வழங்கவேண்டும் என்றும் மன்று கட்டளையிட வேண்டும் என்றும், மன்றிடம் கோரி

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத்தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2006 ஆம் ஆண்டு ஆடி மாதம் 18ஆம் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும் படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக் காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளக்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின் றீர்!

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் மன்றில் தோன்றாவிடில், சட்ட முறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக் கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக்குறிப்பொன்றை கோப்பிடுமாறு நீவிர் மேலும்

| | |
|---|---|
| *என்னால் வரையப்பட்டது* | *நீதிமன்ற கட்டளைப்படி* |
| *கனகரத்தினம் அசோசியேட்ல்* | *து.சிறீமோகன்* |
| *வழக்காளியின் சட்டத்தரணி* | *பதிவாளர்* |
| | *மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்.* |

தேவைப்படுத்தப்படுகின்றீர்.

குறிப்பு-: விளக்கத் திகதியை நீர்ணயிப்பதற்காக பகிரங்க நீதி மன்றத்தில் இவ் வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதி மன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளை கொடுக்குமாறும் 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத் தப்படுகின்றீர்.

*து.சிறீமோகன்*
*கையொப்பம் பதிவாளர்*
*2006 ஆண்டு ஆனி மாதம் 13 ஆம் நாளாகிய இன்று*

(C/405)

# இராசி பலன்

**16.07.2006**
**(ஆனி 32, ஞாயிற்றுக்கிழமை)**
**சஷ்டி முன்னிரவு 8.17மணிவரை**
**பூரட்டாதி காலை 6.13 மணிவரை**
**உத்தரட்டாதி பின்னிரவு 4.35மணிவரை**
**இராகுகாலம் 4.30-6.00மணிவரை**
**சுபநேரம் 9.00-10.30 மணிவரை**
**சித்தாமிர்தம்**

| | |
|---|---|
| மேடம் | காரிய தாமதம், சுபசெலவு, போசன சுகக் குறைவு, சயனசுகக்குறைவ். |
| இடபம் | குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், கீர்த்தி, தெய்வசிந்தை. |
| மிதுனம் | கடின முயற்சி, தேகநலன் , உறவினர் சந்திப்பு, தூர்தேசச் செய்தி |
| கடகம் | புதிய திட்டம், கட்டுப்பாடு, முயற்சி தாமதம், எதிர்பாராத செலவு. |
| சிங்கம் | மரியாதைக் குறைவு, வேலைச்சுமை, வீண்பகை, போசனசுகம். |
| கன்னி | காரிய அனுகூலம், உறவினர் வருகை, தெய்வசிந்தை, விருந்துபசாரம். |
| துலாம் | சுவாரஸ்யம், புதிய முயற்சி, தேகநலன், சத்துருஜெயம். |
| விருச்சிகம் | குடும்பக்கவலை, ரோக நிலை, பணக் குறைவு, முயற்சி தாமதம். |
| தனுசு | மாதா சுகம்; சுபசெலவு, எடுத்த காரியம் தாமதமாகும், ரோக நிலை. |
| மகரம் | கூட்டு முயற்சி, குடும்ப நன்மை, போசன சுகம், வாக்குமேன்மை. |
| கும்பம் | கௌரவக் குறைவு, முயற்சிதாமதம், போசனசுகக் குறைவு, கோபப்படுதல். |
| மீனம் | கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, போசன சுகம், தேகநலன். |

- வளவன்

# 3 கோடி ரூபா விலையில் வாகனம் இறக்குமதி

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியப் பிரி வின் பிரதான நிறைவேற்று அதிக ாரியான முன்னாள் இரா ணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் லயனல் பலகல்லவின் பாவனைக்காக 3 கோடி ரூபா பெறு மதியான வாகன மொன்று இறக் குமதி செய்யப்ப டவுள்ளது.

இந்தத் தகவலை பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங் கங் கள் தெரிவித்துள்ளன. இந்த வாகனக் கொள்வனவுக்கான விலைக் கோரல் மனு நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் லயனல் பல கல்லவின் பாவனைக்காக 85 இலட் சம் ரூபா பெறுமதியான வாகன மொன்றும் நிறுவனத்தினால் கொள் வனவு செய்யப்பட்டது. இந் நிலை யில் மீண்டும் அதிக பெறு மதி யைக் கொண்ட வாகன மொன்றை கொள்வனவு செய்யப்பட்டமைக்குஎதிராக பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

எனினும் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் களஞ்சிய பிரிவின் தலைவர் அசந்த விமல் இவ்வா றான வாகனமொன்று இறக்மதி செய்வது தொடர்பாக தமக்கு எது வும் தெரியாது என்று குறிப் பிட்டுள்ளார். (து-9)


# ஐ.தே.கவின் சமாதான நடவடிக்கைகளை ஓரங்கட்டுகிறது அரசாங்கம்

ஐக்கிய தேசியக் கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான நடவடிக்கைகள் தற்போதைய அரசாங்கத்தினால் ஓரங்கட்டப்படும் அதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து பாரிய அரசியல் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண் டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இரண்டு தசாப்த காலமான இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐக்கியதேசியயக் கட்சி 2002 ஆம் ஆண்டு எடுத்த நடைமுறையை கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை இந்தத் தருணத்தில் அரசாங்கம் உணர வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சமாதான முயற்சிகளுக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிப்போர் தொடர்ந்தும் எதிர்ப்பை வெளிப்படுத்தாமல் அவரின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (து-9)






கொக்குவில் கோவில் வீதியில் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு முன்பாக கழுத்து வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட ஆணின் சடலமொன்றையும், அச்சடலத்தின் பக்கத்தில் ''ஐந்து சந்தி சுகிர்'' என்ற தலைப்பில் களவு, கசிப்பு மற்றும் பல சமூக சீர்கேடுகளில் ஈடுபட்டமையால் இவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது. 'மக்கள் படை' என்ற சுலோக அட்டையையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-திலீவின்பன்)

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 27

முருக-தனுஷ்கோடி



இரண்டாவது உலகப் போரில் ஹிட்லரின் படைத்தளபதிகளில் சிறந்து விளங்கியவன் ரோமல் போர் முனையில் சென்ற இடம் எல்லாம் வெற்றி முரசு கொட்டினான் .அவன் பகைவர்களை டாங்கிப் படைகளால் அவன் விரட்டியடிக்கும் சாமர்த்தியம் அலாதியானது. டாங்கிப் படையைக் கொண்டு எதிரிகளைத் திணற அடித்து முன்னேறிச் சென்றான். ஐரோப்பிய நாடுகளின் படைத்தளபதிகள் நடுநடுங்கிப் போகச் செய்தான் அவன். அந்தத் துணிச்சல் வீரம் விவே ம் அவனுக்கு எப்படி வந்தது என்று கண்டறிய விரும்பினார்கள் பத் திரிகைக்காரர்கள்.

போர் முனையில் ரோமல் படையை நடத்திவந்த இடம் நோக்கி நிருபர்கள் படையெடுத்தனர். அப்போது உடைந்த டாங்கி ஒன்று கிடந்த இடத்தருகே நிருபர்கள் பார்வை சென்றது. அதன் அருகில் அவர்கள் சென்றனர். அந்த டாங்கியை ஒருவன் பழுது பார்த்துக் கொண்டிருந்தான் அவனுடைய உடையில் எண்ணெயும் தூசியும் படிந்திருந்தன. முகமெல்லாம் கரிபடர்ந்திருந்தது. டாங்கியின் அடியில் படுத்துக்கிடந்து பழுது பார்க்கும் வேலையை அவன் மேற்கொண்டிருந்தான் அவன் ஒருவனே அந்த டாங்கியைப் பழுதுபார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தான். எந்தவிதச் சலனமுமின்றி உற்சாகத்தோடு அந்த வேலையை அவன் செய்து கொண்டிருந்தான்.

நிருபர்கள் அவன் பக்கம் சென்றனர். ரோமலின் இருப்பிடத்தை அவனிடம் கேட்கலாம் என்று அருகில் சென்றனர். நாங்கள் பத்திரிகை நிருபர்கள் போர்முனைச் செய்திகளைச் சேகரிக்க நாங்கள் வந்திருக்கிறோம் . ரோமலைச் சந்திக்க வேண்டும் அவர் இருப்பிடம் உங்களுக்குத் தெரியுமா? என்று ஒரு நிருபர் அவனிடம் கேட்டார் டாங்கியின் அடியில் இருந்து வெளியே வந்தான் அவன்.

இரண்டு கைகளையும் தட்டிக்கொண்டான். கைகளில் இருந்த தூசி காற்றில் பறந்தது. நிருபர்களைப் பார்த்துச் சிரித்தான். ரோமல் இவ்வளவு நேரம் டாங்கியின் அடியில் இருந்தான். இப்போது அவன் இருப்பது உங்கள் எதிரே என்றான் அவன்.

நிருபர்கள் அயர்ந்து விட்டனர் . வியப்பால் விழிகளை அகல விரித்துக்கொண்டனர் . ரோமலைக் கேட்டகாமலேயே அவனுடைய வெற்றியின் ரகசியத்தைப் புரிந்து கொண்டனர்.

போய் வருகிறோம் என்றனர் நிருபர்கள் என்னைத் தேடிவந்த விஷயம் என்ன? என்று கேட்டான் ரோமல். போர்களத்தில் எதிரிகளைத் திணற அடிக்கும் உங்களுடைய வெற்றியின் ரகசியத்தைக் கேட்டுவிட்டுப் போகலாம் என்று வந்தோம். உங்கள் செயல் மூலமே அதைத் தெரிந்து கொண்டோம் என்றனர். நிருபர்கள் ரோமலிடமிருந்து அந்தக் கணமே விடையும் பெற்றுக் கொண்டனர். மீண்டும் கடமை ரோமலை அழைத்தது டாங்கியின் அடியில் அவன் புகுந்து கொண்டான்.

டாங்கிகளின் ஒவ்வொரு பாகமும் அவனுக்குத் தெரியும் அவைகளை ஆட்டிப்படைப்பதில் அவன் நிபுணன். டாங்கிகளை இயங்கச் செய்வதில் அவன் வல்லவன். ஆகவேதான் எதிரிகள் அவன் டாங்கிப்படைமுன் விளக்கில் விழும் விட்டில் பூச்சிகளானார்கள்.

ரோமலின் வெற்றி ரகசியம் எப்படியோ அது போலத்தான் காமராஜின் அரசியல் வெற்றி ரகசியமும் இதை நான் அடிக்கடி நினைத்துப் பார்த்துக்கொள்வேன்.

## 20. சுதந்திரம் வந்தது

இந்தியா 200 ஆண்டுகளாக ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இந்திய மக்களின் அடிமை வாழ்வை அகற்ற வேண்டும் என 1929ல் உறுதி மேற்கொள்ளப்பட்டது. லாகூர் நகரில் நேருஜி தலைமையில் மாநாடு நடந்தது. பூரண சுயாட்சியே நாட்டின் அரசியல் குறிக்கோள் என்ற தீர்மானத்தை அந்த மாநாட்டில் காந்திஜி முன்மொழிந்தார். தீர்மானம் ஏகமனதாக நிறை வேறியது.

நாட்டு மக்கள் பல இன்னல்களைக் கடந்தனர் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் தூக்கு மேடைக்கும் அவர்கள் பலியானார்கள் கடைசியில் 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு அதாவது 15ஆம் திகதி அதிகாலையில் பூரண சுதந்திரம் நமக்குக் கிடைத்தது.

அந்த நள்ளிரவில் இந்தியா சுதந்திரம் அடைந்தற்கான வைபவம் டெல்லி அரசியல் நிர்ணய சபையில் கோலாகலமாக நடைபெற்றது. தலைவர்கள் கரந்திஜிக்கு அஞ்சலி செலுத்தினார்கள். நாட்டிலே பால் பொங்க வேண்டும் என்று இரவு பகவலாக உழைத்த காமராஜ் அந்த இரவு 12 மணிக்கு அடைந்த இன்பம் இருக்கிறதே அதை எழுத்தால் வடிக்கவே முடியாது.

ஆகஸ்டு 15ஆம் நாள் இந்திய வரலாற்றில் ஒரு பொன்னாள். அன்று அரசு அலுவலகங்களில் பிரிட்டிஷ் யூனியன் கொடி இறக்கப்பட்டது. மூவர்ணத் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. ஆகஸ்டு 15ஆம் திகதியன்று நேருஜி நாட்டு மக்களுக்கு ஒரு செய்தி விடுத்தார்.

இந்த நாளில் நமது சிந்தனைகள் சுதந்திரச் சிற்பியான தேச பிதாவிடம் செல்கின்றன. அவர் இந்தியாவின் பழம்பெரும் ஆன்ம உணர்வின் சொரூபமாக விளங்கி சுதந்திர தீபத்தை ஏற்றிப் பிடித்து சூழ்ந்து பரவியிருந்த இருளை நீக்கி ஒளியைப் பாய்ச்சினார். என்று நேருஜி அந்தச் செய்தியில் குறிப்பிட்டார். அன்று நாடெங்கும் சுதந்திரத் திருநாள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. மகாத்மா காந்திக்கு ஜே.என்ற முழக்கம் , நாள் முழுவதும் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தது.

நாடு சுதந்திரம் அடைந்து விட்டது. சுதந்திரம் பெற்றது. எதற்காக? அதையும் காமராஜ் பின்கண்டவாறு விளக்கினார்.

காந்திஜியின். தியாக வாழ்க்கையைப் பற்றி எத்தனையோ கூறலாம். அவர் தம் வாழ்நாள் முழுவதையும் நாட்டு மக்களின் சேவைக்காகவே அர்ப்பணித்தார். அவர் நமக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார். அதையும் அஹிம்சை வழியில் பெற்றுத்தந்தார் சுதந்திரப் போராட்டத்தை அவர் சத்திய வழியிலேயே நடத்தினார் அவருடைய வாழ்க்கையே சத்திய சோதனை தான்.

அவருடைய தொண்டுகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம் .அவர் இந்திய மக்கள் அனைவரையும் ஒன்று திட்டினார். காந்திஜி அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்வரை இந்தியாவின் பாமரமக்கள் தரித்திர நாராயணர்களாய்ப் பேசவும் சக்தியற்றுத் தம் கரத்தை வெளியிடவும் துணிவில்லாது நடைப்பிணங்களாக இருந்தனர். இது அண்ணலுக்குப் புரிந்தது. அவர் இத்தகைய ஏழை எளிய மக்களின் ஆசை அபிலாஷைகளை இதயப் பூர்வமாக உணர்ந்தார். அவர்களுடைய விருப்பங்களை ஏற்று எதிரொலித்தார். இதனால் நாட்டின் சாதாரண மக்கள் உணர்வும் எழுச்சியும் பெற்றனர். தலைநிமிர்ந்து நடந்தனர் தம் குரல் எதிரொலிக்கப்படுவதை அவர்கள் தெளிவாகக் கேட்டனர். ஆமாம்! அவர்கள் தங்கள் வழிகாட்டியைக் கண்டு பிடித்துவிட்டனர். காந்திஜியின் வழியில் அவர்கள் வீரநடை போட்டனர். அதனால் தான் நாடு சுதந்திரம் பெற்றது. (தொடரும்)

# ஊடகவியலாளர்களுக்கு சலுகைக் கடன் வசதிகள்

(கொழும்பு)

வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு ஊடகவியலாளர்களுக்கு கணனி ஊடக உபகரணங்கள், புகைப்படக்கருவி, ரெக்கோடர் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்வதற்கான சலுகைக் கடன் வசதிகளை வழங்கவுள்ளது.

மஹிந்த சிந்தனை அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் முன்வைக்கப் பட்டுள்ளவாறு வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சு உள்ளூர் ஊடக வியலாளர்களுக்கு கணனிகள் ஊடக உபகரணங்கள் மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கு மக்கள் வங்கி ஊடகக் கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுக்கவிருக்கின்றது.

நாட்டின் அபிவிருத்தி விலை மதிப்பற்ற பணியை ஆற்றும் ஊடகவியலாளர்களின் ஆற்றலையும் தேர்ச்சித்திறன்களையும் மேம்படுத்துவதற்கு உதவுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்கு விண்ணப்பிக்க தகுதியுடையோர் அரச அல்லது தனியார் துறை ஊடக நிறுவனமென்றில் மூன்று வருடங்களுக்கு குறையாத சேவையை உடைய ஊடகவியலாளர்களாக இருத்தல், 5 வருடத்திற்கு குறையாத சேவையுடைய சுதந்திர ஊடகவியலாளராகவும் 18 வயது தொடக்கம் 55 வயதிற் குட்பட்டவராகவும் நிரந்தர வருமான முடையவராயிருக்க வேண்டும். வருடாந்த வருமானம் 144.000ரூபாவிற்குக் குறையாமலிருக்கவேண்டும்.

இதற்கான விண்ணபத்தை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் வஜிர நாரம்பனாவ மேலதிகச் செயலாளர் ,(திட்டமிடலும் அபிவிருத்தியும்) வெகு சன ஊடக மற்றும் தகவல் அமைச்சு, இல 163, கிருலப்பனை மாவத்தை கொழும்பு 05 என்ற முகவரிக்குத் பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும். (த-9)

# யாழ். பல்கலைக்கழக கலைப்பீடம் கற்றல் செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

கலை, இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசை, நடனம் , சித்தரமும் வடிவமைப்பும் மற்றும் சட்டம் ஆகிய கற்கைநெறிகளுக்கு தெரிவு செய் யப்பட்டு பதிவு செய்யப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான புதிய கல்வி யாண்டு 2005/2006 இற்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் நாளை திங்கட் கிழமை காலை 9.00மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி கற்கைநெறிகளுக்குத் தெரிவான மாணவர்கள் அனை வரையும் 17.07.2006 திகதி திங்கட்கிழமை காலை 8.30மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் அமைந்துள்ள கைலாசபதி கலையரங்கில் தவறாது சமூகமளிக்குமாறு கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவசந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார். கலைப்பீடத்திற்கு விசேட அனுமதியின் கீழ் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களையும் மேற்படி வழிகாட்டல் நிகழ்ச் சித்திட்டத்தில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டுள்ள கலைப்பீடாதிபதி சிரேஷ்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் 24.07.2006ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ)

# வெளிநாட்டு எண்ணெய் சுத்திகரிப்புஆலை அம்பாந்தோட்டையில் அமைக்கப்படும்

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் ஐக்கிய அரபு எமிரேட் நிறுவனம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகள் குறித்து கொழும்பு ஊடகவியலாளர்களிடம் ஊடாக அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா கூறுகையில்,

அம்பாந்தோட்டையில் 1.5 பில்லியன் டொலர் மதிப்பில் வெளிநாட்டு எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை அமைக்க அமைச்சரவை ஒப்புதல் தெரிவித்துள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார அமைச்சின் சில முடிவுகளுக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. உள்நாட்டு விவகார அமைச்சர் சரத் அமுனுகமவினால் முன்வைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிர்வாக அமையத்தின் மறுசீரமைப்புக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மாகாணங்களின் கல்விக் கொள்கைகள் தொடர்பான கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்வைத்த சில பரிந்துரைகளையும் அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது என்றார். (து)

# கருத்தரங்கு

(தனங்கிளப்பு)

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்யின் மாதாந்தக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது வாசஸ்தலமான 'இராஜ்அகம்' இல 11, இராமலிங்கம் வீதி சாவகச்சேரியில் இடம் பெறவுள்ளது.

இவ் கருத்தரங்கில் இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றிய கருத்தாய்வுகளும் மற்றும் ஏனைய விடயங்களும் ஆராயப்படவுள்ளன. (து-37)

# முன்னோடிப் பரீட்சை

கோப்பாய்க் கோட்டத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி யாழ் .வலயக்கல்விப்பணிமனை யின் அனு சரணையுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முன்னோடிப் புலமைப்பரிசில் பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

இக் கோட்டத்துக்குப்பட்ட எட்டு பரீட்சை நிலையங்களில் புலமைப் பரிசில் பரீட்சைமேற்பார்வையாளர்கள் உதவி மேற்பார்வையாளர்கள் , நோக்குநர்களால் இப்பரீட்சையை நடாத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.(த-79)

# முன் பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தால் புதிதாக நியமிக்கப்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சி வகுப்புகள் சகல கல்வி வலயங்களிலும் நடைபெற்றது வருவதாகவும் இதற்கான முதற் பயிற்சி வகுப்பு ஏற்கெனவே கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை நடை பெற்றதாகவும் இப் பயிற்சி வகுப்பு ஒவ்வொரு மாதமும் தொடர்ந்துநடைபெறுமெனவும் யாழ் .வலயக் கல்விப்பணிப்பாளர் இ.செல்வரத் தினம் தெரிவித்துள் ளார். (து-133)

# செயலமர்வு

கல்வி அபிவிருத்தி சம்பந்தமான செயலமர்வு ஒன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசணையுடன் நாளை திங்கட்கிழமை காலை 8 மணி தொடக் கம் மாலை 5 மணி வரை வறக் காப் பெல காபுலங்காவில் நடைபெறவுள்ளது.

நாடளாவியரீதியில் நடைபெறும் இச்செயலமர்வில் வலயக் கல் விப் பணிப்பாளர்கள், திட்டமி டல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அபிவிருத்திப் பணிப்பாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (து-133)

# மும்பை குண்டுவெடிப்பு விசாரணைக்கு உதவ தயார்

## பாகிஸ்தான் அதிபர் தெரிவிப்பு



(இஸ்லாமாபாத்)

மும்பை குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைக்கு உதவ பாகிஸ்தான் தயாராக உள்ளது என அதிபர் முஷாரப் தெரிவித்துள்ளார். மும்பையில் 200 பேரின் உயிரைப் பறித்த தொடர் வெடிகுண்டு சம்பவத்திற்கும், பாகிஸ்தானுக்கும் தொடர்பு இருப்பதாக சர்ச்சைகள் எழுந்துள்ளன. இதுகுறித்து பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தொலைக்காட்சி சேவைக்கு அளித்த பேட்டியில் இதைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும்கூறுகையில்,

மும்பபை குண்டு வெடிப்பு சம்பவத்தில் யார் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் மன்னிக்க முடியாதவர்கள். அப்பாவி மக்கள் பலரின் உயிரையும் பறித்த இச் சம்பவத்துக்கு, நாங்கள் கடும் கண்டனம் தெரிவிக்கிறோம். இந்த விஷயத்தில் இந்திய அரசின் எந்த ஒரு விசாரணைக்கும் பாகிஸ்தானும், நானும் முழு உதவி செய்வோம் என பிரதமர் மன்மோகன் சிங்குக்கு உறுதியளிக்கிறேன்.

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்க்கும் முயற்சிகள் சீரான பாதையில் உள்ளன. ஆனாலும், இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படாததற்கு இரு நாடுகளிலும் உள்ள அதிகப்படியான அரசியல் நிர்ப்பந்தங்களே காரணம். இரு தரப்பிலும் தீவிர எண்ணம்கொண்டவர்கள் உள்ளனர். அதனால், இரு நாடுகளுக்கு இடையேயான சர்ச்சைக்குரிய விஷயங்களில் ஒருமித்த கருத்தை எட்டுவது அவ்வளவு எளிதானதல்ல.

பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை தொடர்வதில் இரு தரப்பிலும் அரசியல் ரீதியாகவும், தீவிரவாதிகள் மூலமாகவும் தடைகள் ஏற்படுகின்றன. ஆனால் அரசியல் தலைவர்கள் தங்களின் விருப்பத்தை வெளிப்படுத்தி, அமைதி நடவடிக்கைகளை தொடர வேண்டும்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் முற்போக்கு சிந்தனையுடையவர். அவர் இரு நாடுகளுக்கு இடையேயான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார் என நம்புகிறேன். பரஸ்பர நம்பிக்கையை மேம்படுத்தும் முயற்சியாக, இரு நாடுகளுக்கு இடையிலான பஸ் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம் இரு நாடுகளுக்கும் ஏராளமான மக்கள் சென்று வருகின்றனர். இதற்கான விசா வழங்குவதிலும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன்.

ஆனாலும் சர்ச்சைக்குரிய விஷயங்களில் இருதரப்பிலும் உயர் அதிகாரிகள் பலமுறை ஆலோசனை நடத்தியும் பலன் ஒன்றும் கிடைக்கவில்லை. என்னைப் பொறுத்தவரை இது போன்ற ஆலோசனை கூட்டங்கள் நேரத்தை வீணடிப்பவை. பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று உண்மையிலேயே விருப்பம் இருந்ததால், ஒருமுறை ஆலோசனை நடத்தினாலே தீர்வு கிடைத்துவிடும். நல்லெண்ணம் இல்லையென்றால், சிறப்பான முன்னேற்றம் கிடைக்காது. (து)



பிரபல யோகா குரு ராம் ஒரு மாத சுற்றுப்பயணமாக லண்டன் சென்றுள்ளார். அவருக்கு அங்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது

# ஆளும் கட்சிக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய முஷாரப்புக்கு தேர்தல் ஆணையம் தடை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு நடக்க இருக்கும் பொதுத்தேர்தலில் ஆளும் கட்சிக்கு ஆதரவாக அதிபர் பர்வேஸ் முஷாரப் தேர்தல் பிரசாரம் செய்யக் கூடாது என பாகிஸ்தான் புதிய தலைமை தேர்தல் ஆணையர் குவாசி முகமது பரூக் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடக்க இருக்கிறது. இந்நிலையில் புதிய தலைமை தேர்தல் ஆணையராக குவாசி முகமது பரூக் ஒரு சில மாதங்களுக்கு முன் பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமாபாத்தில் நிருபர்களைச் சந்தித்த பரூக் கூறுகையில், பாகிஸ்தான் அரசியல் சட்டத்தின் படி அதிபர் முஷாரப் பாராளுமன்றத்தின் ஒரு அங்கம். இதன்படி, தேர்தல் குறித்து தேசிய அசெம்ளி உறுப்பினர்களையோ, செனேட்டர்களையோ அல்லது எம்.பிகளையோ சந்தித்து பேசவோ தேர்தல் தொடர்பான வழிகாட்டிக் குறிப்புக்களை வெளியிடவோ அதிபருக்கு உரிமை உண்டு. ஆனால் எந்தவொரு உறுப்பினரையும் ஆதரித்து பிரசாரம் செய்யக் கூடாது.

அடுத்தஆண்டு நடக்க இருக்கும் பொதுத் தேர்தலில் இராணுவ ஆட்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் ஆளும் கட்சிக்கு ஆதரவாக பர்வேஸ் முஷாரப் பிரசாரம் செய்ய முடியாது. அது அரசியல்சட்டத்தையும் மீறிய செயலாகக் கருதப்படும். நாடு கடத்தப்பட்ட பெனாசீர் பூட்டோ மற்றும் நவாஸ் ஷெரீப் ஆகியோரின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந் தால் அவர்கள் வாக்களிக்க முடியும். வாக்காளர் பட்டியல் பதிவு செய்திருக்கும் எந்த ஒரு குடும்ப உறுப்பினரும் தேர்தலில் ஓட்டளிக்க முடியும் என்றார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டது போலவே, இந்த முறையும் பர்வேஸ் முஷாரப் மீண்டும் அதிபர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவாரா என நிருபர்கள் கேட்டதற்கு இதுகுறித்து நான் கருத்துச் சொல்வது பொருத்தமாக இருக்காது என பரூக் தெரிவித்தார். (து)

உலக தரிசனம்

# மாமனாரின் காதைக் கடித்து துப்பினாராம் மருமகள் !

(உடுமலை)

உடுமலை அருகே மாமனார்-மருமகள் இடையே ஏற்பட்ட தகராறில் மாமனாரின் காதை மருமகள் கடித்துத் துப்பிய சம்பவம் நடந்தது. இதில் காயமடைந்த மாமனார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுமலை வட்டம் செங்கண்டிபதூர் கிராமத்தில் உள்ள புதுக்காலணியைச் சேர்ந்தவர் கருப்புசாமி. இவரது மகன் நாராயணன் மற்றும் மருமகள் ஈஸ்வரி ஆகியோர் அடுத்தடுத்த வீட்டில் வசித்து வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை கருப்புசாமி அவரது வீட்டில் உள்ள தென்னை மரத்தில் தேங்காங் பறித்துக் கொண்டிருந்தார்.

அப்போது நாராயணனின் குழந்தை அங்கு விளையாடிக் கொண்டிருந்தது. குழந்தை விளையாடும்போது எப்படி தேங்காய் பறிக்கலாம் என்று தனது மாமனாரைப் பார்த்து கேட்டுள்ளார் மருமகள் ஈஸ்வரி.

இருவருக்கும் வாக்குவாதம் முற்றியது. அப்போது அங்கு வந்த மகன் நாராயணனுக்கும் கருப்புசாமிக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதில் ஆத்திரமடைந்த ஈஸ்வரி, கருப்புசாமியின் வலது காதைக் கடித்துத் துப்பினார்.

இது தொடர்பாக கருப்புசாமி கொடுத்த புகாரின் பேரில் மடத்துக்குளம் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (து)

# விண்வெளி வீரர்கள் இன்று பூமிக்கு திரும்புவர்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் டிஸ்கவரி ரொக்கெட் மூலம் 7வீரர்கள் விண்ணில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச மிதக்கும் விண்வெளி ஆய்வு கூடத்துக்கு சென்றனர். அந்த வீரர்கள் மிதக்கும் விண்வெளி ஆய்வு கூடத்தில் ஆய்வுகள் நடத்தினார்கள்.

பிடிஸ்கவரி ரொக்கெட்டின் எரிபொருள் டாங்கியில் ஏற்பட்ட கோளாறுகள், ஆய்வு கூடத்தில் ஏற்பட்ட கோளாறுகளையும் அவர்கள் சரி செய்தனர். 2 வீரர்கள் விண்வெளியில் இறங்கி நடந்து சென்று ரோபாட் இயந்திரத்தின் மூலம் இந்தக் கோளாறுகளை சரி செய்தனர்.

இந்த மாத தொடக்கத்தில் புறப்பட்டு சென்ற அந்த நிபுணர்கள் இன்று பூமிக்கு திரும்ப ஆயத்த பணிகளை தொடங்கியுள்ளனர். திரும்பி வரும்போது 3000டிகிரி பாரன் ஹீட் வெப்பத்தில் ரொக்கெட் வெடித்து சிதறாமல் தடுக்க அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

7 வீரர்களில் 5பேர் மட்டுமே பூமிக்கு திரும்புகிறார்கள் .2 வீரர்கள் ஆய்வுகூடத்திலேயே தங்கி தொடர்ந்து சோதனை நடத்துகிறார்கள். (து)



பிரான்சின் தேசிய தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. அதை முன்னிட்டு டில்லியில், வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு பிரான்சின் உயரிய விருதான ''விவசாய சிறப்பு விருதினை'' பிரான்ஸ் தூதர் டொமினிக் கிரார்ட் (வலது) வழங்கினார்.

# இஸ்ரேலின் தாக்குதலுக்கு லெபனான் பதிலடி ஏவுகணை வீசி போர்க்கப்பல் தகர்ப்பு

(பெய்ருட்)

இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த 2இராணுவ வீரர்களை லெபனானில் உள்ள அரசு ஆதரவு ஹிஸ்புல்லா இயக்கத்தினர் கடத்திச்சென்று விட்டனர். ஏற்கனவே இஸ்ரேலும் லெபனானும் எதிரி நாடுகள். எனவே இந்த விவகாரத்தை தொடர்ந்து லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

பெய்ருட் நகரில் உள்ள விமான நிலையம் மீது இஸ்ரேல் விமானங்கள் சரமாரி குண்டு வீசியது. பெய்ருட் நகரத்தில் உள்ள 2 மின்சார நிலையங்கள் மீதும் இஸ்ரேல் விமானங்கள் குண்டுமழை பொழிந்தன. இதில் அந்த மின்சார நிலையங்கள் தரைமட்டம் ஆனது. பெய்ருட் நகரமே இருளில் மூழ்கியது.

3ஆவது நாளாக இந்தத் தாக்குதல் நீடித்தது. பெய்ருட் விமான நிலையம் இனி பயன்படுத்த முடியாத அளவுக்கு தரைமட்டமாகி விட்டது. இஸ்ரேலின் போர்க் கப்பல்களும் லெபனானை சுற்றி வளைத்து சரமாரியாக தாக்குதல் நடத்தி வருகிறது. பீரங்கிப் படையும் எல்லையைத் தாண்டி லெபனான் பகுதிக்குள் நுழைந்தது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு லெபனான் பதிலடி கொடுக்கத் தொடங்கி இருக்கிறது. லெபனானில் ஹிஸ்புல்லா இயக் கத்தினர் இஸ்ரேலின் வடக்குப் பகுதிகளில் சரமாரி ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்தினார்கள். 50 க்கும் மேற்பட்ட ரொக்கெட்டுகள் வீசப்பட்டன.

லெபனான் மீதும் இஸ்ரேல் கடல் பகுதியில் இருந்து ஏவுகளை வீசிய போர்க் கப்பல் மீதும் லெபனான் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் ஏவுகணை வீசி எதிர்த்தாக்குதல் நடத்தினார்கள். இதில் இஸ்ரேலின் போர்க் கப்பல் தாக்கப்பட்டது. அதில் 72 இஸ்ரேல் வீரர்கள் இருந்தனர். அவர்களின் கதி என்ன ஆனது என்பது தெரியவில்லை.

இந்தத் தாக்குதலில் எகிப்து நாட்டுக்கு சொந்தமான ஒரு கப்பலும் பலத்தசேதம் அடைந்தது. கடந்த 3 நாட்களாக நடந்து வரும் தாக்குதலில் இஸ்ரேல் மற்றும் லெபனானை சேர்ந்த பொதுமக்கள் 73 பேர் பலியாகிவிட்டனர். (து)

தியாக உணர்வு தோன்றிவிட்டால் எத்தகைய சங்கடங்களையும் கருதாது நமது இலட்சியத்தில் ஈடுபாடு கொண்டு செயலை செய்து முடிக்கும் பேராற்றல் ஏற்படும்.
-சுவாமி இராமதாசர்

வலம்புரி

# கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழ் மக்களின் குறைகளை நேரில் கேட்டறிய வேண்டும்

யாழ்.மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் பெரும் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக படையினரின் சோதனை நடவடிக்கைகள், சுற்றிவளைப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக தமிழ் மக்கள் மரண அச்சத்துடனேயே காலம் கழிக்கின்றனர்.

எனினும் இது விடயம் குறித்து தமக்கு ஏற்படுகின்ற இன்னல்களை மக்கள் யாரிடமும் சொல்ல முடியாமல் திண்டாடுகின்றனர்.

மனித உரிமை ஆணைக்குழுவிற்குத் தெரியப்படுத்தினால் பெயர் அம்பலமாகிவிடும். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவித்தால் நிலைமை மேலும் மோசமாகும். பொலிஸில் முறைப்பாடு செய்தால் பொல்லுக் கொடுத்து அடி வாங்கும் கதையாகிவிடும். இவ்வாறு தமக்கு ஏற்பட்ட கதியை வெளியில் சொல்ல முடியாதவாறு மக்கள் பெரும் துன்பப் படுகின்றனர்.

இவை தவிர அரசியல் பழிவாங்கல்கள், வேலை இழப்புக்கள், நிவாரணம் பெற முடியாத தவிர்ப்பு, மீள்குடியமர்வுக்கான கொடுப்பனவு கிடைக்காமை, யாழ்ப்பாண அரச உத்தியோகத்தர்களின் பழிவாங்கல்கள், நிர்வாகச் சீர்கேடுகள், அரச பணியாளர்களின் பொறுப்பற்ற செயல், வைத்திய சேவையின் குறைபாடு எனப் பல்வேறு பிரச்சினைகளை யாழ். தமிழ் மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இது பற்றி எவரிடமும் கூற முடியாமல் பரிதவிக்கும் மக்களின் அவல நிலையைப் போக்க யாழ்.மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும்.

எல்லா உறுப்பினர்களும் ஏககாலத்தில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து மக்களின் குறைபாடுகளைக் கேட்டறியாது விட்டாலும் கால அட்டவணைப்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது தயவான வேண்டுகோள்.

மக்களின் பிரதிநிதிகள் என்ற பதவிப் பிரதிநித்துவம் செய்பவர்கள் மக்களின் குறைபாட்டைக் கேட்டறியாவிட்டால், வேறு யார்தான் அதனைச் செய்ய முடியும்?

எனவே இது விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அதீத அக்கறை எடுத்து மக்களின் குறைகளைக் கேட்டு ஆவன செய்ய வேண்டும்.

அதிலும் குறிப்பாக ஏழை மக்கள், கல்வியறிவு இல்லாதவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.

அவர்களை ஏமாற்றுவதில், அலைக்கழிப்பதில் அரச பணியாளர்கள் இம்மியும் தயங்குவதில்லை.

பெற்ற பிள்ளையின் பிறப்பைப் பதிவு செய்வதில் கூட ஏழைகள் படும்பாடு பரிதாபத்திற்குரியது. இவற்றை நீக்க உதவுவது தேவையானதல்லவா?

# மின் வெட்டை அமுல்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை திட்டம்

இலங்கையில் அடுத்த ஆண்டில் மின்சார நெருக்கடிகள் எழுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக கூறப்படுகின்றது. அத்தகைய நெருக்கடிகள் ஏற்பட்டால் கட்டாயமாக மின்வெட்டு இடம்பெறக்கூடும் என்றும் மின்சார சபை உள் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நுரைச்சோலை மேல்கொத்மலை மற்றும் கெரவலப்பிட்டியவில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் மின் நிலையங்களை நிறுவுதல் தாமதமாவதாலும் வருடாந்த மின்சார தேவை 10 வீதமாக அதிகரித்துள்ளமையாலும் இந்நிலை எழுந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அடுத்த ஆண்டு மழை குறைவான கால நிலை தோன்றினால் இந் நிலை மேலும் மோசமடையலாம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் மின்சாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக தனியார் நிறுவணங்களிடமிருந்து குறுகிய காலத்திற்காக அதிக விலைக்கு மின்சாரம் பெற்றுக் கொள்ளப்பட்டாலும் இம் முறை அவ்வாறு செய்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாகும்.

தற்போது மின்சார சபை சுமார் 10 ஆயிரம் கோடி கடனுடன் மிக மோசமான நிதி நிலைமையையே கொண்டுள்ளது. இதனால் மின்சார நெருக்கடியில் அரசாங்கம் தலையிட்டு சபைக்குப் பெருமளவு நிதியை வழங்காவிடில் மின்வெட்டை நடைமுறைப்படுத்துவதைத் தவிர மின்சார சபைக்கு மாற்று வழியில்லை என்றும் அவ் வட்டாரத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ச-5)

# இன்னும் இருவார காலத்தில் நாடு திரும்புவார் சரத்பொன்சேகா

(கொழும்பு)

இராணுவ தளபதி லெப்.ஜெனரல் சரத்பொன்சேகா இன்னும் இரண்டு வாரக் காலப்பகுதியில் இலங்கை திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி தற்கொலை தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவ தளபதி சரத் பொன்சேகா தற்சமயம் சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவரின் உடல் நிலை எவ்வளவு தூரம் தேறியுள்ளது .சிறிலங்கா படைத்தரப்பினர் மறைத்து வருகின்ற நிலையில் இன்னும் இரண்டு வாரகாலப் பகுதியில் இலங்கை திரும்புவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த)

# சம்பத் சில்வா கொலை விசாரணையிலிருந்து நான்கு பொலிஸ் குழுக்களும் விலகின

(கொழும்பு)

ஊடகவியலாளர் சம்பத் லக்மல் சில்வா கொலை விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸ்குழுக்களில் நான்கு குழுக்கள் விலகியுள்ளன.

பிரதிப்பொலிஸ் அதிகாரி ஒருவரின் பணிப்புரையின் அடிப்படையிலேயே இந்தக் குழுக்கள் விலகிக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கல்கிஸ்ஸை பொலிஸாரின் குழு ஒன்று மாத்திரமே தற்சமயம் இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (து)

# இரசாயன உரங்களால் ஏற்படும் சூழல் பாதிப்பு

மலைநாட்டுப் பயிராக கருதப்படும் கோவா எமது பிரதேசங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. கோவாவில் புழுக்களின் தாக்கம் ஒப்பீட்டளவில் அதிகமாகும். புழுக்கள் பீடை கொல்லிகளுக்கு இசைவாக்கம் அடைந்து வருவதனால் கோவாவில் பீடைகளை கட்டுப்படுத்துவதற்காக குறித்த கால இடைவெளியில் பீடை கொல்லிகளை தொடர்ச்சியாக விசிற வேண்டியுள்ளது.

இவ்வாறு தொடர்ச்சியாக விசிறப்படும் இரசாயனங்கள் விரிந்த கோவா இதழ்களிலும் முட்டைகளிலும் தேங்கி விடுவதனால் சூரிய ஒளிபட்டு பிரிகை அடைவதற்கு வாய்ப்பில்லாமல் போகலாம்.

தொடர்ச்சியாக செயற்கை உரங்கள், கிருமிநாசினிப் பாவனை அதிகரித்து வருவதால் மண்வளம் குன்றுவதுடன் மண் அங்கிகளும் பாதிப்படைகின்றன. விவசாய நிலங்களில் உணவைத் தேடிக் கொள்ளும் பறவை இனங்களும் அவற்றுடன் உணவுக்காகவும் இதர வசதிகளுக்காகவும் சார்ந்து வாழ்கின்ற உயிரினங்களும் அழிவடையும் நிலைக்கு உள்ளாகின்றன. உணவுச் சங்கிலி மூலம் பிரிகையடையாத நைதரசன் பொருட்கள் செறிவாக்கப்பட்டு கடத்தப்படுவதனாலேயே இந்நிலை ஏற்படுத்துகிறது. இதனால் உயிரினம் பல்வகையில் இழப்பு ஏற்படுவதுடன் இயற்கைச் சூழல் சம நிலையும் குழம்புகின்றது.

அதிகரித்த செயற்கை இரசாயனங்களால் விவசாய நிலங்களுக்கு அண்மித்த நீர் நிலைகளில் நைதரசன் செறிவு அதிகரிப்பதுடன் நிலத்தடி நீரும் பாதிப்படைகிறது.

இதற்கு மாற்றுவழியாக பொருத்தமான இயற்கை உரங்களைப் பயன்படுத்தலாம். (து-36)

# ஈழத் தமிழ் மக்கள் பிரச்சினையில் நியாயம் இருக்கிறது ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வை.கோ. அறிவிப்பு

(சென்னை)

காழ்ப்புணர்ச்சி காரணமாக விடுதலைப்புலிகளைச் சந்தித்ததாக தனக்கு எதிராகப் புரளியைக் கிளப்பிவிட்டார்கள் என ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வை.கோ. தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வைகோ மேலும் தெரிவிக்கையில், புதுப் பொலிவும் த உற்சாகமும் பெற மூகை சிகிச்சைக்காக சமீபத்தில் கேரளாவில் உள்ள கோட்டக்கல் ஆர்ய வைத்தியசாலைக்கு சென்றேன். அப்போது விடுதலைப் புலிகள் அங்கு என்னைச் சந்தித்ததாகவும் அதுபற்றி மத்திய உளவுத்துறை விசாரித்து வருவதாகவும் திட்டமிட்டே புரளியை கிளப்பி விட்டிருக்கிறார்கள்.

அதன்பிறகு பொலிஸ் என்னிடம் வந்து உங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வேண்டுமா என்று கேட்டார்கள். நான் வேண்டாம் என்று சொன்னேன். மத்திய உளவுத்துறை விசாரிக்கிறது என்று சொல்வது அபத்தம்.

விடுதலைப்புலிகளை சந்திக்க வந்திருந்ததால் அதை வெளிப்படையாகவே சொல்வேன். மறைக்கவேண்டிய அவசியம் இல்லை. விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து விட்டு வந்ததை கூட நான் வெளிப்படையாகவே கூறினேன்.

ஈழத்தமிழர்களின் இனபிரச்சினை 50ஆண்டுகளுக்கு மேல் உள்ளது. அங்கு அவர்களுடைய உரிமை பறிக்கப்படுகிறது. அங்குள்ள தமிழினத்தை ஆயுதப் போராட்டம் தான் பாதுகாத்து வருகிறது. தமிழ் ஈழ மக்களின் பிரச்சினையில் நியாயம் இருக்கிறது. அதனால் ஆதரிக்கிறோம். இதில் ஒளிவு மறைவு இல்லை.

காழ்ப்புணர்ச்சி காரணமாகத்தான என்னைப்பற்றி வீண் புரளி விடுகிறார்கள். விடுதலைப் புலிகளை நாங்கள் ஆதரிக்கிறோம். இது தமிழர்களின் இனப்பிரச்சினை பற்றிய ஆழமான விஷயம். அது தவறான கருத்தாக வெளிவந்து விடக்கூடாது.

அன்ரன் பாலசிங்கம் சமீபத்தில் கொடுத்த பேட்டியை அப்படியே டி.வி.யில் ஒளிபரப்பாகியிருந்ததால் தவறான கண்ணோட்டம் வந்துஇருக்காது என்றார். (து)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

(கற்கோவளம்)

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டம் கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை பி.ப.3 மணியளவில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

இதன்படி தலைவராக இ.வரதீஸ்வரனும் உபதலைவராக வி.சேது நாயகமும் செயலாளராக திருமதி சு.விஜயரத்தினமும் நிர்வாக உறுப்பினர்களாக ;

யோ.இராசரத்தினம், ஆர்.திருத்துவராசா, இ.பாலசண்முகம், சே.செல்வசுகுணா, செ.ரவிக்குமார், இ.ஆழ்வாப்பிள்ளை , பா.வேதநாயகம், பொ.அப்பையா, ம.இராமசாமி, அ.உமாசங்கர் ஆகியோரும் இவர்களைவிட 11 பேர் கொத்தணி ரீதியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-104)

# 198 இலங்கை அகதிகள் விழுப்புர முகாமிற்கு மாற்றம்

மண்டபம் அகதிகள் முகாமிலிருந்து கடந்த வியாழக்கிழமை விழுப்புரம் மாவட்ட அகதிகள் முகாமிற்கு 198 இலங்கை அகதிகள் மாற்றப்பட்டனர். இராமேஸ்வரம் தீவுப் பகுதிகளுக்கு வரும் அகதிகள் அனைவரும் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதில் உள்ள அகதிகள் தமிழகத்திலுள்ள முகாம்களில் உறவினர்கள் இருந்தால் அந்த முகாமிற்குச் செல்ல அக்கறை காட்டுகின்றனர். இந்நிலையில் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் அகதிகளின் விருப்பப்படி விழுப்புர மாவட்டம் கீழ்ப் புத்தூர்ப்பட்டி அகதிகள் முகாமிற்குச் செல்ல மனு அளித்திருந்தனர். (த-9)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



உண்மையைப் போன்ற தவம் இல்லை. பொய்யைப் போன்ற பாவம் இல்லை. யாருடைய இதயத்தில் சத்தியம்உண்டோ அந்த இதயத்தில் குருதானே இருக்கின்றார்.

சுவாமி விவேகானந்தர்

# விடுதலைப் புலிகளின் அலுவலகம் கருணா குழுவால் சேதமாக்கப்பட்டது

## கண்காணிப்புக் குழுவில் முறையீடு

(மட்டக்களப்பு)

தம்பிலுவிலில் பூட்டப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கருணா குழுவே காரணம் என விடுதலைப்புலிகள் போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு 7.35 மணியளவில் தம்பிலுவிலில் இயங்கிவந்த விடுதலைப்புலிகளின் மாவட்ட அலுவலகத்திற்குள் புகுந்த கருணாகுழு மற்றும் இராணுவ அதிரடிப்படையினர் அலுவலகக் கதவினை உடைத்து உட்புகுந்து அங்கிருந்த அலுவலகத் தளபாடங்களை உடைத்து எரியூட்டிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்ததைத்தொடர்ந்து கண்காணிப்புக்குழுவினர் விடுதலைப்புலிகளுடன் மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச் சந்திப்பின்போது காஞ்சிரம்குடா அதிரடிப் படை முகாமிலிருந்து கடந்த மாதம் 30 ஆம் திகதியும் சென்ற மாதம் 7 ஆம் திகதியும் அதிரடிப்படையினர் எறிகணைத் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலின்போது பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் அச்சத்துடனும் பீதியுடனும் உள்ளதாக கண்காணிப்புக் குழுவிற்கு விடுதலைப்புலிகளால் எடுத்துரைக்கப்பட்டதுடன்,

தம்பிலுவில் மாவட்டச் செயலகம் எரியூட்டப்பட்டமைக்கு விசேட அதிரடிப்படையினருடன் சேர்ந்தியங்கும் கருணாகுழுவே காரணம் எனவும் அத்தகைய நடவடிக்கை தமது உறுப்பினர்களை வலிந்து சண்டைக்குச் சீண்டுவதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவிடம் விடுதலைப்புலிகள் முறையிட்டுள்ளனர். (ச-5)



நேற்று கிளிநொச்சி சென்ற கண்காணிப்புக் குழுத் தலைவரை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# கட்டைக்காட்டு மக்கள் திடீரென இடம்பெயர்வு

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வெற்றிலைக்கேணி மற்றும் கட்டைக்காட்டுப் பகுதி மக்கள் நேற்று இடம் பெயர்ந்தனர்.

வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் கடற்படையினரின் மூன்று படகுகள் ரோந் தில் ஈடுபட்டிருந்ததை அவதானித்த மக்கள் கடற்படையினர் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சத்தினால் இடம்பெயர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இப் பகுதியில் ஹெலிகொப்டர் ஒன்றும் வட்டம் இட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (ச-5)

# வவுனியா அபிவிருத்திக் கூட்டத்தில் வெளிமாவட்ட எம்.பிக்கள் பங்கேற்பு

## தமிழ் எம்.பிக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பு

வவுனியாவில் நேற்று நடைபெற்ற அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் வெளிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டமைக்கு தமிழ்க் கூட்டமைப்பின் வவுனியா எம்.பிக்கள் கண்டனம் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குழுக் கூட்டத்தில் அவர்கள் பங்கு பற்ற முடியாது என சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து அவர்கள் அதில் கலந்து கொள்ளவில்லை.

பின்னர் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் தலைமையில் விசேட மாநாடு ஒன்று நடைபெற்றது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் றியல் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரம ; அமைச்சர் றிச்சாட் பெளவுதீன், பிரதியமைச்சர்களான மகிந்த சமரவீர,டி.எம். தயாநாயக்க மற்றும் வன்னிமாவட்ட உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், வினோதராதலிங்கம், ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச , பதில் இராணுவத் தளபதி, வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர், வடமத்திய மாகாண முதலமைச்சர், மாகாண பிரதம செயலாளர் , மாகாண அமைச்சின் செயலாளர்கள், பணிப்பாளர்கள், வவுனியா , மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்கள்,உதவி அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், சகல திணைக்களத் தலைவர்கள் , பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வன்னி மாவட்டத்தின் பல்வேறு தேவைகள், குறிப்பாக வீதி அபிவிருத்தி, சுகாதாரத் திணைக்களக் குறைபாடுகள், அகதி முகாம்களில் வாழும் பொதுமக்களின் பிரச்சினைகள், சமுர்த்தி வேலைத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

தேவைகள் குறித்து அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் ஆலோசகர் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

பாதுகாப்புத் தொடர்பாக ஆராயப்பட்ட போது சோதனைச் சாவடிகளில் பெண்களை பெண் படையினரே சோதனையிட வேண்டும் எனவும் இராணுவத்தினரும் பொலிஸாரும் வவுனியா நகரில் முகத்தைக் கறுப்புத் துணியால் கட்டியவாறு வவுனியா மாவட்டத்தில் கடமையில் ஈடுபடுவது மக்களை அச்சுறுத்தும் செயலாகவுள்ளது என இந்த மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது. (ச-5)

# அரசும் புலிகளும் பேச்சு மூலம் தீர்வு காணமுன்வர வேண்டும்

## பிரான்ஸ் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை ஒன்றின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முன் வர வேண்டும் என பிரான்ஸ் அரசாங்கம் கூறியுள்ளது.

பிரான்ஸின் தேசிய தினத்தை முன்னிட்டு இலங்கையின் பிரான்ஸ் தூதர் விடுத்துள்ள அறிக்கையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் வன்முறைகளை விலக்கி பேச்சுவார்த்தைகளுக்கு முன் வர வேண்டும். அதேநேரம் இலங்கை அரசாங்கமும் தமக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும்.

இலங்கையில் சமாதானத்திற்கான வாய்ப்புக்கள் இன்னமும் அற்றுப் போகவில்லை. இந்த நிலையில் வன்முறைகளுக்கு ஒரு போதும் பிரான்ஸ் அரசாங்கமும் சர்வதேசமும் ஆதரவளிக்காது என்றும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-9)

# மசகு எண்ணெய் அகழ்வுக்காக இல.கடலைப் பயன்படுத்த சீனாவுக்கு அரசு அனுமதி

(கொழும்பு)

மசகு எண்ணெய் அகழ்வுக்காக இலங்கைக் கடற்பிரதேசத்தின் ஒரு பகுதியை சீனாவுக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு அந்நாட்டின் பிரதமர் வென்றியாவோவை சந்தித்த போது இதுகுறித்து அறிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பை வளர்க்கும் நோக்குடனேயே சீனாவுக்கு இச்சந்தர்ப்பத்தை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதுவேளை இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் சீனா உதவும் என்றும் வென்றியாவோ கூறியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச-5)

## கதிர்காமத்தில் சுற்றிவளைப்பு

கதிர்காமப் பகுதியில் நேற்று முன்தினம் காலை நடத்தப்பட்ட சுற்றி வளைப்புத் தேடுதலின்போது 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிகாலை 4 மணிமுதல் 8 மணிவரை நடத்தப்பட்ட இந்த சுற்றிவளைப்புத் தேடுதலின் போது அந்தப் பகுதியில் உள்ள 7 பொலிஸ் நிலையங்களின் உத்தியோகஸ்தர்கள் ஈடுபட்டார்கள். (த-9)

## ஜே.வி.பியின்...

தமது கட்சி தீர்மானித்துள்ள தென்று கூறியுள்ளார்.

மேலும் மகிந்தவுக்குத் தேவையான வகையில் கட்சியைக் கட்டுப்படுத்துவதற்கான முறை பற்றியும் நந்தன குணதிலக சில விடயங்களை முன்வைத்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாணாந்துறை அமைப்பாளர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு நந்தனவுக்கு மகிந்த அழைப்பு விடுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கட்சியின் அனுமதியின்றி எந்தவொரு உறுப்பினரும் மகிந்தவைச் சந்திக்கக்கூடாது என்று முடிபெடுக்கப்பட்டுள்ள நிலையில் குணதிலக எப்படி மகிந்தவைச் சந்திக்கலாம் என கட்சியின் உறுப்பினர்கள் கட்சித்தலைவர் சோமவன்ச அமரசிங்கவிடம் கேள்வியெழுப்பியுள்ளனர். (ச-5)

## கிளி.திரும்பினார்...

கிளிநொச்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயாமாஸ்டர் கடந்த புதன்கிழமை நள்ளிரவு இருதய சிகிச்சைக்காக கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தமிழ்ச்செல்வன்...

இச் சந்திப்பில் மட்டக்களப்பு வாகனேரியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவ ஆழ ஊடுருவும் குழுவின் தாக்குதல் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் இவ் அவசர சந்திப்பை ஏற்பாடு செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் கருத்துத் தெரிவித்த தமிழ்ச்செல்வன், மகிந்தவின் அரசு யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்காது, அதற்கு மாறாக யுத்தத்தை ஏற்படுத்துவதாக குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் தடுக்கப்படாது விட்டால் புலிகள் பெருமெடுப்பிலான யுத்தத்தினை இராணுவத்திற்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும் என தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.

இதேவேளை இத் தாக்குதல் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை உல்ப் ஹென்றிசன் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## புனர்வாழ்வுக்...

பணியாற்றிய ஊழியர்கள் எவருக்கும் எதுவித காயமும் ஏற்படவில்லை.

இவ் அலுவலகத்துக்கு 100 யார் தொலைவில் இராணுவக் காவலரண் ஒன்று அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகம் தாக்கப்பட்டமை தொடர்பில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கண்டித்துள்ளது. (து-133)

## 12 இராணுவத்தினரது...

செல்லப்பட்டன.

விடுதலைப்புலிகளின் பதில் தாக்குதல் நடவடிக்கையில் கொல்லப்பட்ட இராணுவத்தினர் பெயர்களும் வெளியாகின.

அவை வருமாறு,

லெப்ரினன்ட் எம்.கே.ஜி ஹனன்கல, லெப்ரினன்ட் ரி.பி.எச்.எஸ். பெர்னாண்டோ ,கோப்ரல் வி.பி. ஜெயசிங்க, கோப்ரல் எச்.டி.ஜெயசிறி, கோப்ரல் ஏ.பி.ஆர். பத்திரன, லான்ஸ் கோப்ரல் என். எஸ்.தலவாத்தகே, லான்ஸ் கோப் ரல் டபிள்யு லசந்த, லான்ஸ் கோப் ரல் எல்.ஏ.எம். ஞானசேன , லான்ஸ் கோப்ரல் ஆர்.எம்.சி.ரட்நாயக்க,பிறைவேட் கே.கே.பெரெரா, பிறை வேட் எஸ்.ஏ ஜகத் ,பிறைவேட் எம். எம்.எஸ். என். அழகக்கோன் இதே வேளை விடுதலைப்புலிகளால் கைது செய்யப் பட்ட இராணுவக் கோப்ரலை தமிழீழ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகதெரிவிக்கப்பட்டது. (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.